பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 23 செவ்வாய்க்கிழமை (08-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:223

# தமிழ்த் தேசிய கூட்டமைப்புக் கட்சிகள் அனைத்துக்கும் கூட்டணி வாய்ப்பூட்டு!

## மக்களின் ஆணைப்படி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளுடன் சேர்ந்து உழைக்கவேண்டும் என்று வற்புறுத்து

கொழும்பு,ஜுலை8

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் கட்சிகள் தமிழ்மக்களின் மத்தியில் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அறிக்கைகளை விடுக்கக்கூடாது. ஒன்றையொன்று குறைகூறுவதையும் அவை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி வாய்ப்பூட்டுப் போட்டிருக்கிறது.**

**தமிழ்மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் வழங்கிய ஆணைப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகள் அனைத்தும் பிரச்சினைக்குத் தீர்வு காணப் புலிகளுடள் சேர்ந்து உழைக்கவேண்டும் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி வற்புறுத்தியிருக்கிறது.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை அடுத்து கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் விடுத்த உத்தியோகபூர்வ அறிக்கையில் மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

விரைவில் பேச்சுக்கள் தொடங்க வேண்டும்; அதற்கு ஏதுவாக அரசு வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் ஏற்படுத்த வேண்டும்; ஜனாதிபதியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் இதற்குப் பூரண ஆதரவு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை கூட்டணியின் கொழும்பு அலுவலகத்

(02ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் குண்டு வெடித்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!

### விறகு பொறுக்கச் சென்றவேளை அனர்த்தம்

காரைநகர்,ஜுலை8

காரைநகர் கடற்படைமுகாமுக்கு சமீபமாகவுள்ள நீலங்காடு பகுதியில் நேற்றுப்பிற்பகல் 3.30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தப்பகுதியில் மீளக்குடியமர அண்மையில் அனுமதிக்கப்பட்டது. இதனையடுத்து அப்பகுதியில் மீளக் குடியமர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பொன்னுத்துரை ஜெயக்குமார் (வயது26) என்பவரே இதில் உயிரிழந்தவராவார்.

அப்பகுதியில் விறகு பொறுக்குவதற்காகச் சென்ற பிரஸ்தாப நபர், குண்டு போன்று காணப்பட்ட வெடிபொருளை எடுத்துப் பார்த்ததாகவும்-

அப்போது அக்குண்டு வெடித்ததில் முகம் சிதறிய நிலையில் அவர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அவர் உயிரிழந்த இடத்துக்கு அருகில் மற்றுமொரு குண்டும் மீட்கப்பட்டுள்ளது. (ஒ-3-73)

## ஆபிரிக்க பிரமுகர்கள் கலந்துகொள்ளும் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜுலை8

'சமாதான முயற்சிகளில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள்' என்ற தலைப்பிலான செயலமர்வு ஒன்று நாளை புதன்கிழமை பண்டத்தரிப்பில் இடம்பெறவுள்ளது.

இந்தச்செயலமர்வில் தென்னாபிரிக்கத் தேசியகாங்கிரஸின் பிரமுகர் கலாநிதி றொக்ஸி வில்லியம், நைஜீரியாவைச் சேர்ந்த கலாநிதி கயபோ பெமி ஆகியோர் பங்கேற்று தமது அனுபவங்களை எடுத்துரைப்பர்.

இந்தச் செயலமர்வில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகள், படை அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ-3)

## ரூபவாஹினியில் பிரபாகரனின் வாழ்க்கை வரலாறு

கொழும்பு,ஜுலை8

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றுச் சித்திரம் ஒன்று நேற்றிரவு 'ரூபவாஹினி' சிங்கள சேவையில் ஒளிபரப்பப்பட்டது.

தேசியத் தலைவரின் ஆரம்ப வாழ்க்கை, அவரது குடும்ப வாழ்க்கை ஆகியன அடங்கிய இந்தச் சித்திரம் நேற்றிரவு 9.30மணிமுதல் அரைமணி நேரம் ஒளிபரப்பப்பட்டது. (ஒ-3)

## திருமலையில் திடீர் சுற்றிவளைப்பு; ஐவர் கைதாகி நால்வர் விடுதலை!

### ஒரு பெண் தொடர்ந்து தடுத்துவைப்பு

திருகோணமலை,ஜுலை8

திருகோணமலை நகரில் நேற்று இராணுவத்தினரும் பொலீஸாரும் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஐவர் கைது செய்யப்பட்டனர்; நூற்றுக்கணக்கானோர் விசாரணை செய்யப்பட்டனர்.

மாலை 6 மணியளவில் மூவர் விடுவிக்கப்பட்டனர்.

இரு பெண்களைத் தொடர்ந்தும் தடுத்துவைத்திருந்த பொலீஸார், இரவு ஏழு மணியளவில் ஒரு பெண்ணை விடுதலை செய்தனர். மற்றைய பெண் விடுதலை செய்யப்படவில்லை. பெண்கள் இருவரும் மூதூரில் உள்ள சாரதா இல்லத்தின் பணியாளர்களாவர்.

வைபவம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக திருகோணமலைக்கு வந்திருந்த இவர்கள், பத்திரிகையாளர் ஒருவரின் வீட்டில் தங்கியிருக்கும்போதே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது.

அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் இல்லை என்பதாலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

## ரெலோ அலுவலகம் மீது திருமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை,ஜுலை8

திருகோணமலை சுங்க வீதியில் அமைந்துள்ள ரெலோ அலுவலகத்தின் மீது நேற்று இரவு 8.45 மணியளவில் இனந்தெரியாதோர் கிரனேட் வீசியுள்ளனர்.

நேற்றுக் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா அங்கு இருந்திருந்தார். 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை அவர் இந்த அலுவலகத்திலிருந்து கட்சிப் பணிகள் சிலவற்றை மேற்கொள்ளவிருந்தார். ஆனால், அவசரமாக அவர் நேற்று மாலை கொழும்புக்குக் கிளம்பிவிட்டார்.

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்று வன்னி செல்லமாட்டார்

### திருகோணமலை சென்று பேச்சு

கொழும்பு,ஜுலை8

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரிக்வே டெலிவ்ஷன் இன்று வன்னிக்கு செல்லமாட்டார். இன்று அவர் வன்னிக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறியப்படுகிறது.

கடற்போக்குவரத்து தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புதிய உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபடவிருக்கிறார்.

இதற்கிடையே, டெலிவ்ஷன் நேற்று திருகோணமலை சென்றார். அவருடன் முப்படைகளின் தளபதிகளும் பொலீஸ்மா அதிபரும் உடன்சென்றனர் என்று அறியப்படுகிறது.

கண்காணிப்புக் குழுத் தலைவர் கடந்த இரண்டு தினங்களாகப் படைத்தரப்பினர் மற்றும் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் திருமலையில் நடத்திய பேச்சுக்களில் எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக அமைப்பின் நிதி அதிகாரம் குறித்து ஆலோசனை

கொழும்பு,ஜுலை8

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புச் சட்டவரைபில் நிதியைக் கையாளும் அதிகாரங்கள் குறித்து இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை எனத் தெரியவந்தது.

இந்தச் சட்ட வரைபில் பெரும்பாலான விடயங்கள் இறுதியாக்கப்பட்டுவிட்டதாகவும் -

ஆனால், நிதியை எவ்வாறு கையாள்வது என்ற விடயம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சட்டவரைவில் இறுதி வடிவம் குறித்து சமாதானக் குழுவின் பிரதிநிதிகளான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, பேர்னாட் குணதிலக ஆகியோர் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

நிதியைக் கையாளும் அதிகாரங்கள் தொடர்பாக சில பரிந்துரைகளை அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ளனர் என்றும் -

அந்தப் பரிந்துரைகளை பிரதமர், சட்டமா அதிபரின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. சட்டவரைவு ஓரிரு தினங்களில் இறுதி வடிவம் பெறும் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (ஒ-3)

## மு.கா. தனித்தரப்பு கோரிக்கையும் அரசின் வரைவுடன் அனுப்பப்படும்

### பிரதமர் உறுதியளித்தார் என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு,ஜுலை8

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான அரசின் திட்ட வரைவுடன் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சமாதானப் பேச்சுகளில் தனித்தரப்பாக கலந்துகொள்ளவேண்டும் என்ற கோரிக்கையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தன்னிடம் உறுதியளித்துள்ளார் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் முஸ்லீம்களுக்கு கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொடர்பான முஸ்லிம் காங்கிரஸின் ஆலோசனைகள் அரசிடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் தனித்தனியாக கையளிக்கப்படும்.

இவ்வாலோசனைகள் நோர்வே

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'றான்' நிதியில் நடந்த கட்டடப்பணிகளில் மோசடி?

# வங்கிக்கணக்கின் முழு விவரங்களை சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்க உத்தரவு

### யாழ். நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது

யாழ்ப்பாணம்,ஜுலை8

குடாநாட்டில் 2000ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் மீளக்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையால்(றான்) மேற்கொள்ளப்பட்ட 14 கட்டடங்களின் கட்டுமானப்பணிகளில் மோசடிகள் நடந்ததாகக் கூறப்படுவது தொடர்பில் சம்பந்தப்பட்ட பணப்பரிமாற்ற வங்கிக் கணக்கின் விவரங்களை இரகசியப் பொலீஸாரிடம் வழங்கும்படி யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வருகைதந்துள்ள இரகசியப்பொலீஸ் அதிகாரியான பலப்பிட்டிய, யாழ்.நீதிமன்றில் நேற்றுத்தாக்கல் செய்த மனு ஒன்றை விசாரணை செய்த யாழ். நீதிவான் மேற்கண்ட உத்தரவை வழங்கியுள்ளார். அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் செயலாளர் அ.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தமிழ்மக்களை உளரீதியாக பிரிக்கும் முயற்சி பலிக்காது!

## திருமலைக் கூட்டத்தில் தென்னவன்

திருகோணமலை,ஜுலை8

தமிழ்மக்களை உளரீதியாகப் பிரிப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் அன்றுமட்டுமல்ல, இன்றும் கூட கங்கணம்கட்டியுள்ளனர். திருகோணமலை மாவட்டத்திலும் அத்தகைய சதிவேலைகள் பல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலத்துண்டிப்பிலும், மண் அபகரிப்பிலும் பலர் கவனம் செலுத்துகின்றனர்.

- இவ்வாறு கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு திருகோணமலை அரசியல் பணிமனையில் நடைபெற்ற விழாவில் தலைமை வகித்துப் பேசிய திருமலை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்னவன் தெரிவித்தார்.

தென்னவன் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்தின் ஒவ்வோர் அடிமண்ணும் பாதுகாக்கப்படவேண்டும். திருகோணமலையில் இரகசியக் குடியேற்றம், மண்அபகரிப்பு, ஆக்கிரமிப்பு என்பன தொடர்கின்றன. இவற்றை நாம் விட்டுவைக்கக்கூடாது. உளரீதியான பாதிப்புக்கும் உட்படக் கூடாது.

எமது பிரதேசமண் அபகரிப்புக்குத் தடைக்கல்லாக இருந்த கரும்புலிகள் இயக்கம், கப்டன் மில்லரின் செயற்பாட்டின் மூலம் ஆரம்பமானது. நெல்லியடித் தாக்குதலின்போது இராணுவத்தை மட்டுமல்ல, அரசையும் ஆட்டம் காணவைத்த பெருமை கப்டன் மில்லருக்குரியது. இலங்கை இராணுவம் மட்டுமல்ல, இந்திய இராணுவமும் அடக்குமுறையைக் கையாண்டபோது அவர்களைத் தகர்த்தெறியும் ஆயுதமாக கரும்புலிகள் பயன்பட்டனர்.

கரும்புலிகள் கல்மனம் படைத்தவர்கள் அல்லர், இளகிய மனம் படைத்தவர்கள். மக்களின் துயர் துடைக்க தம்மை அர்ப்பணித்தவர்கள்.

- இவ்வாறு கூறினார் தென்னவன்.

சட்டத்தரணி கா.சிவபாலன் பேசுகையில்:-

கரும்புலிகள் தமது தந்திரோபாய செயற்பாடுகளால் இராணுவத்தை தடுத்து நிறுத்தியதோடு அப்பாவி மக்களை வதைப்படுத்திய சட்டங்களையும் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர் என்றார்.

கவிஞர் வ.விக்கினேஸ்வரன் பேசுகையில்:-

கரும்புலிகள் திறமையற்றவர்களோ, கல்வி அறிவற்றவர்களோ அல்லர். போதிய தகுதி இருந்தும் தமது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தியாது மக்களுக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள் என்று கூறினார்.

யேசுதாசன் பேசுகையில்:-

புலிகள் மனவலிமை கொண்டவர்கள், ஒரு துப்பாக்கியுடன் ஆரம்பமான போராட்டம் இன்று பலம் பொருந்திய இராணுவப் படை அமைப்பாக வியாபித்திருக்கின்றது. நூறு போராளியால் செய்யக்கூடிய காரியங்களை ஒரு கரும்புலியால் சாதிக்கமுடியும் - என்றார். (ம)

# வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காண முயற்சி

## ஐ.தே.க. நிறைவேற்றுக் குழு ஏகமனதாக முடிவு

எந்தத் தடை வந்தாலும் வடக்கு - கிழக்கு அரசியல் தகராறை பேச்சு மூலம் தீர்ப்பதற்கான பயணத்தை நிறுத்தாமல் மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்தும் ஒரு பிரேரணை ஐ.தே.க. நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இலங்கையை புதிய பாதையில் இட்டுச் செல்லும் 'அரசியல் நோக்கு' கட்சியின் அடுத்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற பிரேரணையும் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் பேச்சு மேசைக்கு அழைத்து வருவதற்காக இயன்ற எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்ற ஒரு பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது.

# கொழும்பு - மட்டு. ரயில் சேவை நேற்று மீண்டும் பாதிப்படைந்தது!

## ஏறாவூர் அருகே சிலிப்பர் கட்டைகள் கழற்றப்பட்டன

கொழும்பு,ஜுலை8

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை நேற்று மீண்டும் பாதிப்புக்குள்ளானது ஏறாவூருக்கும் கொம்மாந்துறைக்கும் இடையே இனந்தெரியாதோரால் ரயில் பாதையிலுள்ள சுமார் 15 சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டதாலேயே ரயில் சேவை பாதிப்புக்குள்ளானது.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயில் வாழைச்சேனை ரயில் நிலையத்தைச் சென்றடைந்தபோது ரயில் பாதை சேதப்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது. இதனால், ரயில் அங்கேயே நிறுத்தப்பட்டது.

நேற்றுக்காலை ரயில் பாதை மீண்டும் திருத்தப்பட்டதையடுத்து காலை 9 மணியளவில் ரயில் மட்டக்களப்பைச் சென்றடைந்தது.

'எல்வ்' ரக வாகனமொன்றில் வந்த சுமார் 15 பேர் சிலிப்பர் கட்டைகளை கழற்றிச் சென்றனர் எனவும், இச்செயலுக்கான காரணம் தெரியவரவில்லை எனவும் ஏறாவூர் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் தரித்து நிற்கும் ரயில் கொழும்புக்கு எப்பொழுது புறப்படும் என்பது தெரியவரவில்லை.

### பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் வழக்கு:

# மரண தண்டனை தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டுக்கு நிதி சேகரிப்பு

பதுளை,ஜுலை8

பண்டாரவளை, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் வழக்கில் விதிக்கப்பட்ட மரண தண்டனை தீர்ப்பை எதிர்த்து, மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை ஊவா மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொது மக்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பான ஆரம்பக்கூட்டம், பண்டாரவளை புஸ்பாராம விகாரை மண்டபத்தில் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போது, மரண தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதெனவும், அதற்கென செலவாகும் பணத்தை சேகரிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது. இதற்கென நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

பெருந்திரளான மக்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தின்போது இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வழக்குச் செலவிற்காக சேகரிக்கப்பட்டுள்ளது.

### யாழ். செயலகத்தின் ஏற்பாட்டில்

# பிரதேச ரீதியாக தேவைகளை இனம் காண துரித நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தேவைகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்து வரும் மக்கள் தொகை அதிகரித்து வருவதனாலும் -

அவர்களது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில் அவற்றை இனம்காணவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி விவரங்கள் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக மாவட்ட மட்டத்தில் உள்ள 15 உள்ளூராட்சி சபைகளின ஊடாக திரட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனசமூக நிலையங்கள், நூலகம், முன்பள்ளி, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, பொதுக் கிணறு, மலசலகூடம், ஆயுர்வேத வைத்திய சாலை, சந்தைகள் மற்றும் பல்வேறு விவரங்கள் இவ்வாறு திரட்டப்படும் என்றும் -

மேற்படி விவரங்கள் ஒவ்வொன்றையும் அதற்கென ஒதுக்கப்பட்ட படிவங்களில் குறித்து அனுப்புமாறும் திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-185)

### முன்னாள் மேலதிக அரச அதிபர் உரை

# வறிய மாணவரின் கல்வித்தரம் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது

## அதனை உயர்த்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு வேண்டும்

வலி.கிழக்கு,ஜுலை8

குடாநாட்டில் உள்ள வறிய மாணவர்களின் கல்வித்தரம் பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனை உயர்த்துவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்களிப்பு நல்கவேண்டும்

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம்.

இருபாலையில் உள்ள மக்கள் நலன் காக்கும் பிரிவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வ.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொது அமைப்புக்கள் மூலம் நாம் பலவித சேவைகளைச் செய்யலாம். ஆனால், அவற்றில் முதற்கண் நிற்க வேண்டியது கல்விச்சேவையே ஆகும். கல்விச்சேவையின் மூலம் மாணவர்களை கல்வியில் உயர்வு பெற வைத்தால் குடும்பம், சுற்றம், நாடு அனைத்தும் உயர்வடையும். எந்த ஒரு மாணவப் பருவத்தினரும் தமது கல்வியைக் கற்காமல் இருக்க முடியாது. கல்வியானது ஒருவரின் உரிமையும்கூட. ஆயினும், கிராமப்புறங்களில் வறுமையின் காரணமாகச் சில பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை. இந்நிலை மாறவேண்டும்.

பொது அமைப்புக்கள் இது விடயத்தில் அக்கறை எடுக்கவேண்டும். அந்த வகையில் இருபாலையில் உள்ள மக்கள் நலன்காக்கும் பிரிவு வறிய மாணவர்களின் கல்விக்குப் பலவிதமான பங்களிப்பினை நல்கி வருகிறது.

இச்செயற்பாடு வறிய மாணவர்களைக் கல்விகற்கத் தூண்டுகிறது. இது அவர்களின் எதிர்காலத்தையும் வளப்படுத்த வல்லது - என்றார்.

கிராம அலுவலர் எஸ்.தயாபரன், பண்டிதர் த.இராசரத்தினம், இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ம-10-180)

## வலைபந்தாட்டம்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக ஆடுகளத்தில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ சண்டிலிப்பாய் வி.க. 'ஏ' அணி எதிர் பட்டர்பிளை வி.க. அணி

★ அரியாலை ஐக்கிய வி.க. எதிர் பமிலியன்ஸ் வி.க. (ஒ-5)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடந்தது.

இக்கூட்டம் குறித்து கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் உத்தியோகபூர்வ அறிக்கை விடுத்திருக்கிறார். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருப்பதாக அவர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

★ இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாமதமின்றி பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கு ஏதுவாக அரசின் வாக்குறுதியின் பிரகாரம் போதிய அளவிலான அதிகாரத்துடனும், விடுதலைப் புலிகளின் கணிசமான பிரதிநிதித்துவத்துடன் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் அரசிற்கும் புலிகளுக்குமிடையில் உருவாகும் ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்படவேண்டும்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமது கொள்கை கட்டமைப்புக்குள் ஓர் இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதியையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியையும், இந்த நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்று த.வி.கூட்டணி கோருகின்றது. இந்த ஆதரவு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதியினதும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினதும் ஆக்கபூர்வமான பங்களிப்பாக அமையும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகின்றது.

இலங்கை அரசினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் வெளியிடப்பட்ட கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வை உருவாக்குவதற்கு கிட்டியுள்ள சந்தர்ப்பத்தை நழுவவிடாது முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளை த.வி.கூ. கேட்டுக் கொள்கின்றது.

சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தினால் தொடர்ந்து வழங்கப்பட்டுவரும் ஆதரவும் நாட்டின் ஏனைய மக்கள் மத்தியில் விசேடமாகத் தமிழ் மக்களின் மத்தியில் சமாதானத்துக்காக நிலவும் மிகுந்த ஆவலும் - சமாதான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சகல தரப்பினரையும் பேச்சு மூலமாக ஒரு தீர்வை எட்டுவதற்குக் கட்டாயப்படுத்துகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சமாதான முயற்சிகளுக்கு தனது பரிபூரண ஆதரவை எப்போதும் வழங்கும்.

★ தேசிய பிரச்சினையாகிய தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஒரு கொள்கை வகுக்கப்படாமல் சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படக்கூடிய ஒப்பந்தம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழர் பிரச்சினைக்கு பேச்சு மூலமாக ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு இவ்விதமான ஓர் உடன்பாடு அதிக பாதகத்தை விளைவிக்கும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் திடமாக நம்புகின்றது தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதற்கு முன்னர் முயற்சிகள் எடுத்த ஒரு கட்சி என்ற அடிப்படையிலும் - ஒரு மாற்று அரசாக அமையக்கூடிய கட்சி என்ற அடிப்படையிலும் தமிழர் பிரச்சினைகளுக்கு ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுவதற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் சுதந்திரக்கட்சி ஈடுபடக் கூடாதென்று தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகின்றது.

★ தமிழ் மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்கள் ஏற்படுத்தக்கூடிய வகையில் அறிக்கைகளை விடுவதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் ஒன்றையொன்று குறைகூறுவதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ்மக்களால் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒன்றுசேர்ந்து தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு உழைக்கவேண்டும் என்றும் மத்திய செயற்குழு கேட்டுக்கொள்கின்றது.

வடக்கு - கிழக்கின் பல பாகங்களில் இருந்து கூட்டத்தில் கலந்துகொண்ட பல உறுப்பினர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களுக்கு திரும்புவதற்கு ஏதுவாக இரவு 8.30 மணியளவில் கூட்டம் நிறைவெய்தியது.

நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்ற விடயங்கள் நடைபெறவிருக்கும் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நலிவுற்றோர் நலன் பேண கொடி வாரம் ஆரம்பம்

நலிவுற்றோர் நலவாழ்வுத் திட்டத்திற்கான கொடிவாரம் இன்று ஆரம்பமாகிறது.

இக்கொடிவாரம் வைபவரீதியாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலுள்ள நல்லூர் கல்விக் கோட்டப் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட சமுதாய முன்னேற்ற நிலையத்தினால் நலிவுற்றோர் நலனுக்காக முன்னெடுக்கப்படும் இக் கொடிவாரம், பாடசாலைகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் செயற்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# மூன்று பிரதேச உறுப்பினர்களின் அங்கத்துவம் மீது ஐ.தே.க. தடை!

## மற்றொருவரின் அங்கத்துவம் இடைநிறுத்தம்

கொலைக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகும் ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு எதிராக கட்சித் தலைமைப்பீடம் நடவடிக்கை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. இதன்படி, ஐ.தே.க. பிரதேச உறுப்பினர்கள் மூவர் கட்சியிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

ஐ.தே.க. நிறைவேற்றுக்குழு கூட்டம் கடந்த சனிக்கிழமை எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்றபோது இந்த நடவடிக்கையை மேற்கொள்வதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.

இதற்கிடையே, நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் மற்றொரு ஐ.தே.க. பிரதேச சபை உறுப்பினரின் கட்சி அங்கத்துவத்தை வழக்கு விசாரணை முடியும்வரை இடைநிறுத்தி வைக்குமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

அமைச்சர் கருஜெயசூரிய தலைமையிலான ஒழுக்காற்றுக் குழு செய்த சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டே பிரதமர் ரணில் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

# தலையொட்டிப் பிறந்த இரட்டைச் சகோதரிகளின் மூளை பிரிக்கும் சத்திரசிகிச்சை நேற்று நடந்தது!

சிங்கப்பூர்சிற்றி,ஜூலை8

ஈரான் நாட்டைச் சேர்ந்த தலை ஒட்டிப் பிறந்த இரட்டைச் சகோதரிகளைப் பிரிப்பதற்கான சத்திரசிகிச்சை ஒரு முக்கிய கட்டத்தைத் எட்டியுள்ளது.

லேடன், லாலே ஆகிய இரு சகோதரிகளது தலைகளுமே தற்போது மருத்துவ சத்திரசிகிச்சை மூலம் பிரிக்கப்படவுள்ளன. நேற்றுமுன்தினமிரவு இவர்களுக்கான முதற்கட்ட சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மிக முக்கியமானதும் இரண்டாம் கட்டமானதுமான சத்திரசிகிச்சை நேற்றுக் காலையில் இடம்பெற்றது. இதுதான் மிகமிக முக்கியமானதாகும்.


லேடன், லாலே இருவருக்குமே தனித்தனியே மூளைகள் இருக்கின்றன. ஆனால், அவை இரண்டும் ஒரே மண்டையோட்டுக்குள்ளேயே இருக்கின்றன. அவர்களது இரு மூளைகளுக்கும் இரத்தத்தைக் கொண்டு செல்லும் இரத்தக்குழாய் ஒன்று மட்டுமே உள்ளது. அதனைப் பிரித்தாலேயே இரட்டையர்கள் இருவரையும் தனித்தனியே பிரிக்க முடியும்.

அதற்கான மிக முக்கிய சத்திரசிகிசசையே நேற்று நடைபெற்றது. ஏற்கனவே இருக்கும் இரத்தக்குழாயை யாராவது ஒருவருக்கு விட்டுவிட்டு மற்றையவருக்கு புதிய இரத்தக் குழாய்யொன்று பொருத்தப்படவேண்டும்.

இந்த புதிய இரத்தக் குழாய் லேடனின் வலது தொடையில் இருந்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வெட்டி எடுக்கப்பட்டது.

பின்னர் அவர்களின் மண்டையோடு பிரிக்கப்பட்டு சத்திரசிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும், மருத்துவர்கள் எதிர்பார்த்ததைவிட இதற்கு அதிக நேரம் எடுத்தது. இருவரது மண்டையோடுகளும் பொருந்தியிருந்த இடம் மிகவும் கடினமானதாக இருந்தமையால் அவற்றை வெட்டிப் பிரிப்பதற்கு மருத்துவர்களுக்கு நீண்டநேரம் தேவைப்பட்டது.

பிரிக்கப்படும் இரட்டையர்கள்




லேடனும் லாலேயும் தனித்தனி மூளைகளைக் கொண்டிருந்த போதும் ... வை ஒட்டியுள்ளன.

அவர்களுடைய இரு மூளைகளுக்கும் தற்போது ஒரு குழாயினால்தான் இரத்தம் கிடைக்கிறது.

காலில் இருந்து எடுக்கும் குழாய் மூலம் மருத்துவர்கள் தனித்தனியே மூளைகளுக்கு வெவ்வேறான இரத்தக் குழாய்களை அமைப்பார்கள்.

தசை மற்றும் தோலினால் தலையில் திசுக்கள் மீண்டும் உருவாக்கப்படும்.

அதன் பின்னர் லேடனின் தொடையில் இருந்து எடுக்கப்பட்ட இரத்தக் குழாயை தேவையான இடத்தில் பொருத்தும் பணியை மருத்துவர்கள் ஆரம்பித்தனர். நேற்று மாலை வரை அந்தப் பணி தொடர்ந்தது.

இரத்தக் குழாய் பொருத்தப்பட்டு இரு மூளைகளுக்கும் தனித்தனியே இரத்தம் செல்ல ஆரம்பித்ததும், இரு சகோதரிகளையும் பிரிக்கும் பணியை மருத்துவர்கள் மேற்கொள்ள இருந்தனர்.

மிகச் சிக்கலான இந்தப் பணியில் தாம் நிச்சயம் வெற்றிபொறுவோம் என்று மருத்துவர்கள் நேற்று நம்பிக்கை வெளியிட்டனர்.

இந்தப் பணியில் பலவேறு நாடுகளையும் சேர்ந்த 28 மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குத் துணையாக 100 தாதியர்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சத்திரசிகிச்சையின் இறுதிக் கட்டமாக, இரு சகோதரிகளும் பிரிக்கப்பட்ட பின்னர் அவர்களது மண்டையோடுகள் ஒட்டி இருந்த இடத்தில் காணப்படும் மண்டையோடற்ற வெளியை வேறு இடங்களில் இருந்து எடுக்கும் தசைகள் மற்றும் தோல்களைக் கொண்டு மூடும் பணி இருக்கும்.

இந்த அபாயகரமான சத்திரசிகிச்சை வெற்றிபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் 50 சதவீதம் மட்டுமே என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சிசிச்சை வெற்றி பெறவில்லை என்றால் சகோதரிகள் மரணிக்க வேண்டி இருக்கும். எனினும் தாம் பிரிந்து வாழ ஆசைப்படுவதால் மரணத்தையும் எதிர்கொள்ளத் தயார் என்று சத்திரசிகிச்சைக்கு முன்னரே அவர்கள் தெரிவித்திருந்தனர். (ம)

# பலஸ்தீன கைதிகள் மேலும் சிலரை விடுவிப்பதற்கு இஸ்ரேல் தீர்மானம்!

ஜெருசலேம்,ஜூலை7

மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தின் மீதான நல்லெண்ண அடிப்படையில் இஸ்ரேல் மேலும் சில பலஸ்தீனக் கைதிகளை விடுவித்துள்ளது.

பலஸ்தீன பிரதமர் அப்பாஸுடன் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள வசதியாக பலஸ்தீனக் கைதிகளை விடுவிக்க இஸ்ரேலிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது இந்தக் கைதிகள் விடுவிப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்று தெரிவித்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனத் தீவிரவாதிகளை பிரதமர் அப்பாஸ் எப்படி கட்டுப்படுத்துகின்றாரோ அதற்கேற்பவே ஏனைய கைதிகளின் விடுதலை துரிதப்படுத்தப்படும் எனறு தெரிவித்தார்.

இஸ்ரேல் வசம் சுமார் 400 வரையான கைதிகள் உள்ளனர். அவர்களில் யாரை விடுவிப்பது என்று அமைச்சரவைக் குழு முடிவு செய்யும். ஆனால், விடுவிக்கப்படுபவர்களில் ஆயுததாரிகளும் இஸ்ரேலுக்கு எதிராகச் செயற்பட்டவர்களும் அடங்கமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய அதிகாரிகளுக்கும் பலஸ்தீன அதிகாரிகளுக்கும் இடையில் அண்மைய நாள்களாக தொடர்ச்சியாக இடம்பெற்ற பேச்சுக்களில் கைதிகள் விடுவிப்பே மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. அனைத்துக் கைதிகளும் விடுவிக்கப்படவேண்டும் என பலஸ்தீன அதிகாரிகள் வலியுறுத்தி இருந்தனர்.

ஆனால், தற்போது கட்டம் கட்டமாகவே கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளமை அவர்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவது பலஸ்தீன தீவிரவாதிகளை நிரந்தரப் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றுக்குக் கொண்டு வருவதற்கு இணங்க வைக்க பிரதமர் அப்பாஸுக்கு உதவியாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கப்படுகின்றனர். (ம)



மெக்சிக்கோவின் கீழ்சபைக்கான இடைத்தேர்தல் வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது. அச்சமயம் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்றன. வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. கார்கள் சேதப்படுத்தப் பட்டன. நேற்றுமாலைவரை வெளியான முடிவுகளின்படி அதிபர் வின்சன்ட் வொக்ஸின் ஆளும் கட்சி தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. முழுமையான முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே ஆளும்கட்சியின் தோல்வி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கீழ்ச்சபையின் 500 ஆசனங்களுக்கு இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது. ஆளும் கட்சி 31வீதமான வாக்குகளையே பெற்றிருந்தது. (ம)

# 3 வெவ்வேறு தாக்குதல்களில் இரு அமெ. படையினர் பலி!

பக்தாத்,ஜூலை8

ஈராக்கில் நேற்று இடம்பெற்ற மூன்று வெவ்வேறான தாக்குதலில் 2 அமெரிக்கப் படையினரும் 2 ஈராக்கியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.



பக்தாத்தில் இரு ஈராக்கியர்களுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் முதலாவது அமெரிக்கச் சிப்பாய் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அந்த ஈராக்கியர்களில் ஒருவரும் கொல்லப்பட்டார்.

இரண்டாவது அமெரிக்கச் சிப்பாய் பக்தாத்தின் வடபகுதியில் உள்ள ஓர் இடத்தில் நடந்த உள்ளூர் தயாரிப்புக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

மூன்றாவது சம்பவம் மேற்கு பக்தாத்தில் இடம்பெற்றது. அமெரிக்க வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட ஆர்.பி.ஜி தாக்குதலில் 4 அமெரிக்கப் படையினர் காயமடைந்தனர். அமெரிக்கர்கள் நடத்திய பதில் தாக்குதலில் ஓர் ஈராக்கியர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயமடைந்தார்.

கடந்த 24 மணிநேரத்தில் 3 அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மே மாதம் முதலாம் திகதி ஈராக்கில் போர் முடிந்ததாக புஷ் அறிவித்த பின்னர் நேற்றுவரையில் அங்கு 29 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். (ம)

# 11 படையினரின் கைதுச் சம்பவத்தால் துருக்கி - அமெரிக்கா இடையே பிளவு

அங்காரா,ஜூலை8

ஈராக்கில் துருக்கியப் படையினர் அமெரிக்க இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டமையை அடுத்து துருக்கிய தலைநகர் அங்காராவில் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்துள்ளன. இந்த விவகாரம் நேட்டோ நாடுகள் மத்தியிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு ஈராக்கில் நேற்றுமுன்தினம் துருக்கியப் படையினர் 11 பேரை அமெரிக்கப் படைகள் திடீரெனக் கைது செய்தன. குர்திஷ் இனத்தவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் சுலைமானியா என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



ஸ்பெயினில் காளை மாடுகளை வீதிகளில் ஓடவிட்டு அவற்றை விரட்டிப் பிடிக்கும் விழா நேற்றுக் காலை ஆரம்பமானது. தெருக்களில் ஓடும் காளைகளைப் பிடிப்பதில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஈடுபட்டனர். மாலைவரை இந்த விழா இடம்பெற்றது.

துருக்கியப் படையினரின் கைது வாஷிங்ரன் மற்றும் அங்காரா இடையிலான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

"இந்தச் சம்பவம் துருக்கியர்களுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில் இருந்த நம்பிக்கையில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. இரு நாடுகளின் உறவுகளிலும் அது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது" - என்று துருக்கிய இராணுவ பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவப் பொலிஸார் திட்டமிட்டு கைதுசெய்யப்பட்டதாக நாம் நம்பவில்லை. ஆனால், அங்கிருந்த உள்நாட்டு நிலைதான் அவர்களைக் கைதுசெய்யவேண்டிய சூழலை ஏற்படுத்தியதாக நான் நம்புகின்றேன் என்றும் அவர் சொன்னார்.

ஆனால், சுலைமானியாவுக்கு துருக்கியப் படையினர் வந்தமை குறித்து அமெரிக்கப் படையினர் சந்தேகங்களைக் கிளப்பியுள்ளனர்.

ஈராக்கில் உள்ள குர்திஷ்கள் தனிநாடுகோரிப் போராடி வருகின்றனர். துருக்கி அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இதனால், குர்திஷ் போராளிக் குழுத் தலைவர்களைக் கொல்லும் நோக்கோடு துருக்கியப் படையினர் சுலைமானியாவுக்கு வந்திருக்கக் கூடும் என்று அமெரிக்கர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

# அமெரிக்கப் படையினர் வந்தால் வெளியேறுவேன்

## நைஜீரிய அதிபர் தெரிவிப்பு

மொன்ரோவியா,ஜூலை8

லைபீரியாவுக்கு அமெரிக்கப் படைகள் வந்தால் மட்டுமே தான் பதவியில் இருந்து வெளியேறுவேன் என்று அதிபர் சார்ள்ஸ் ரெய்லர் அறிவித்துள்ளார். அவரைப் பதவியில் இருந்து வெளியேறுமாறு மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களும் உலகத் தலைவர்களும் வற்புறுத்திவரும் நிலையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

போர்க்காலக் குற்றங்களுக்காக தேடப்பட்டுவரும் அதிபர் ரெய்லர் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து ரெய்லரின் அறிவிப்பு வந்துள்ளது.

ரெய்லருக்கு தஞ்சம் அளிக்க நைஜீரிய அதிபர் ஒபுஜா ஒபசான்ஜோ உறுதியளித்துள்ளார். ஆனால், நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு இணங்கியுள்ள ரெய்லர் தான் தஞ்சம் அடைவதற்குரிய உத்தியோகபூர்வ உறுதிமொழியை நைஜீரியா தராமல் நாட்டைவிட்டு வெளியேற முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் லைபீரியாவில் அவசரமாகத் தேவைப்படும் மனிதநேய உதவிகள் பற்றி அறிந்து கொள்வதற்கு அமெரிக்காவின் இராணுவ சிவில் அதிகாரிகள் 20பேர் அங்கு சென்றுள்ளனர். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருமண சேவை

1975ஆம் ஆண்டு, M.B.B.S. டாக்டர், 37½ பாவம் செவ்வாய்க் குற்றமற்ற, 1973ஆம் ஆண்டு, B.A. கிளாக், 1968ஆம் ஆண்டு B.Sc. ஆசிரியர், 1971ஆம் ஆண்டு புடைவைக் கடை உரிமையாளர், 1958ஆம் ஆண்டு M.Sc. கொம்பியூட்டர் இஞ்சினியர், U.K., கனடா வெளிநாட்டுப் பிரஜாவுரிமையுள்ள மணமக்கள் உண்டு. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 298, கோயில் வீதி, நல்லூர். (19950)

## கடை வாடகைக்கு

இலுப்பையடிச் சந்தியிலிருந்து 100யார் தூரத்தில் பலாலி வீதியில் இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: 071-2245966. (19931)

## ஆங்கில தின போட்டிகள்

அச்சுவேலி,ஜூலை8

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில மொழித்திறன் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன. (எ-4-11)

## திலீபன் மருத்துவமனை தாளையடியில் திறப்பு

செம்பியன்பற்று,ஜூலை8

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மருதங்கேணி தாளையடி வீதியில் திலீபன் மருத்துவமனை ஒன்று உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளையினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (எ-36)

## கோண்டாவிலில் தங்கச்சங்கிலி நள்ளிரவில் அபகரிப்பு

வலி.கிழக்கு,ஜூலை8

நள்ளிரவுவேளை வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கு உறக்கத்தில் இருந்த பெண் அணிந்திருந்த சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கோண்டாவில் பகுதியில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் முன்கதவைத் திறந்து உட்புகுந்த திருடர்கள் கைக்கடிகாரம் மற்றும் ஒரு தொகைப்பணம் ஆகியவற்றைத் திருடியதுடன், மேற்படி பெண்ணின் 2 பவுண் சங்கிலியையும் திருடிச்சென்றுள்ளனர்.

கோண்டாவில் இராமநாதன் கலட்டிப் பகுதியில் வசிக்கும் டேவிற் பெனடிக்ற் என்பவரது வீட்டிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்றையதினம் இரவு அதே பகுதியில் உள்ள வேறொரு வீட்டிலும் 5பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. (எ-10-180)

## கடன் அடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை8

சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் நீரிறைக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ள இந்த நீரிறைக்கும் இயந்திரங்களுக்குரிய நிதியை நான்கு தடவைகளில் விவசாயிகள் செலுத்த வேண்டும் என்று உடுவில் பெரும்பாக அலுவலர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார். றொபின் மற்றும் வில்லியம்ஸ் ஆகிய நீரிறைக்கும் இயந்திரங்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.(எ-10-185)

## தவறிவிட்டது

142, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் கனகசிங்கம் என்பவருடைய கிராமசேவகரின் (J/78) அடையாள அட்டை நகல், வீசேட அடையாள அட்டை (இல. 091002961)., தொழில்சார் அடையாள அட்டை (J/ZI/SA/336), சாரதி அனுமதி அட்டை DL No.A00 520 5589 இவற்றுடன் சிறுதொகைப்பணம் என்பன அடங்கிய கறுப்பு பேர்ஸ் 2003.07.03ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.நகர மத்தி, ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(21-19-26) (19949)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 - 07 - 1930



இறப்பு 20 - 06 - 2002

## திருமதி பூமணி அப்புத்துரை

ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு மட்டும்
மாறாது எம் மனதில் நீங்காது நிலைத்திருக்கும்

இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

வண். வடமேற்கு,
ஆனைக்கோட்டை. (19909)(21-14-16)

# அழைப்புக் கட்டளை

இல.16பிரிவு 55(1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள /மாவட்ட நீதிமன்றத்தில்

01. தம்பு றபாயல் பெனடிற்றும்
02. பெண் பிலோமினாவும், இருவரும்

13/1, கோயில்வீதி ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

வழக்கு இல. காணி/278 எதிர் வழக்காளி/கள்

செல்வநாயகம் கஜேந்திரன்,
218/2, முனீஸ்வரன் றோட்டு,
யாழ்ப்பாணம்.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/ எதிராளி/க்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி
இவ்வழக்கில் அணைத்துள்ள பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறுவதற்காக

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால், அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம்நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதி மன்றக் கட்டளைப்படி,
து. சிறீமோகன்,
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

பவானி சற்குணராசா,
வழக்காளிகளின் சட்டத்தரணி.

குறிப்பு:- விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் சேவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து. சிறீமோகன்
கையொப்பம் பதிவாளர்
2003ஆண்டு ஆடி மாதம் 02ஆம் நாளாகிய இன்று. (21-26-14-19) (19938)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 01 - 10 - 1956



உதிர்வு 08 - 06 - 2003

## திருமதி கலாவல்லி சிவகுமார்

(ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச ம.வி.)

08-06-2003 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு, மலர்வளையம் வைத்த சங்கானை சிவப்பிரகாசம் ம.வி. அதிபர், ஆசிரியர், ஊழியர்கள், மாணவர்களுக்கும் மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும் எமக்குப் பல வழிகளிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி யாத்திரையில் பங்குபற்றியவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதுடன், இன்று (08-07-2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எல்லாம்வல்ல விசுவத்தனை முருகனின் திருப்பாதத்தினை ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
ஒரு பொல்லாப்பும் இல்லை" (யோகர் வாக்கு)

- குடும்பத்தினர்.

'பழமுதிர்ச்சோலை'
பண்ணாகம், சுழிபுரம். (19940) (21-19-14-16)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவதருமவள்ளலும், சமூக சேவையாளரும், வேணி களஞ்சியம், வேணி ரான்ஸ்போட், கோகுல ரான்ஸ்போட், கொழும்பு உரிமையாளரும், யாழ்.சத்திரம் ஞான வைரவர், கந்தர்மடம் சித்தி விநாயகராலய அறங்காவற் சபைகளின் தலைவரும், யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம், புளியங்கூடல் முத்துவிநாயகர், வேலணை சிற்பனை முருகன் ஆலயச் சபைகளின் தனாதிகாரியும், தீவக அபிமானக்கழகம், செஞ்சிலுவைச் சங்கம், அகில இலங்கைத் திருமுறை மன்றம், வேலணை முடிப்பிள்ளையார் ஆலயச் சபை, பசுப் பாதுகாப்பு ஒன்றியம், தீவக மாவீரர் தாயிலும் இல்லம் ஆகியவற்றின் உழைக்கும் உறுப்பினரும், புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவிற் திருப்பணிச் சபையின் உபதலைவருமான,

## உயர்திரு. குமாரசாமி கங்கைவேணியன்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் 30-06-2003 அன்று சமாதான நீதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்துள்ள இவர்பெற்ற இப்பதவி இவரின் சேவைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகுகவென அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

புளியங்கூடல் வாழ் மக்கள் சார்பாக
இந்தன் முத்து விநாயகர் ஆலய
பரிபாலன சபையினரும்,
மகாமாரி சனசமூக நிலையத்தினரும்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. (19937) (21-14-16)

# பெயர்மாற்ற அறிவிப்பு

871, கடற்கரை வீதி, பாஷையூரைப் பிறப்பிடமாகவும்,
பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட
யேசுதாசன் சேயோன் புனிதவளன்
ஆகிய எனது மகன் தனது பெயரை
யேசுதாசன் வளன்

என மாற்றம் செய்துள்ளார். எனவும், இவர் இப்பெயரிலேயே அழைக்கப்பெற்று அனைத்து ஆவணங்களிலும் கையெழுத்து இடுகிறார் எனவும் இத்தால் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

(19946) (21-26-14-16) ம. யேசுதாசன் (தந்தை)

# 31ஆம் நாள் நெஞ்சுருக்கும் நினைவலைகள்

மண்ணகம் 13 - 05 - 1927



விண்ணகம் 08 - 06 - 2003

## திருவாட்டி ஆபிரகாம் எலிசபெத் (பூமணி)

(மல்லாகம்)

"மகிழ்ச்சியூட்டும் இடத்தில் எனக்குப் பங்கு கிடைத்தது.
என் உரிமைப் பேறு எனக்கு நேர்த்தியாயிற்று"

இரக்கமுள்ள இறைவா! நாம் மிகுந்த விசுவாசத்துடன் உம்மைக் கெஞ்சிக் கேட்கின்றோம். உமது அடியாளாகிய திருமதி ஆபிரகாம் எலிசபெத் அவர்களை உமது தெய்வீக வீட்டில் வாழ வரம் அருள வேண்டுகின்றோம்.

இவரின் ஆத்மசாந்திக்காக இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியிலும் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இந்த அழைப்பையே அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது தாயார் தேவனடி சேர்ந்த துக்க செய்திதனை செவிமடுத்த கணமதில் பக்கத்தில் வந்து பரிவோடு பேசி தேறுதல் சொல்ல தேடி வந்த அனைவருக்கும் தொலைவில் இருந்து தொலைபேசி, தொலைநகல் மூலம் ஆறுதல் சொன்ன அத்தனை நெஞ்சங்களுக்கும் பசியாத போதும் புசி என்று வற்புறுத்தி உணவு படைத்திட்ட உள்ளங்கொண்ட அனைவருக்கும் மலர்வளையங்களை வழங்கியவர்களுக்கும் வழிபாட்டைச் சிறப்பித்த வழிபாட்டுக் குழுவினருக்கும் ஆன்மா இளைப்பாற ஆலயத்தில் வந்தமர்ந்து ஆண்டவனைப் பிரார்த்தித்த அடியார்களுக்கும் யாழ். மரியன்னை பேராலய பங்குத்தந்தை, உதவிப்பங்குத் தந்தையர்கள் மற்றும் ஏனைய தந்தையர்களுக்கும் கன்னியர்களுக்கும் பாலம் பொறிந்து பயப்பட்ட வேளையில் அணிலாக நின்று எளிதாக்கி வாகனங்களைத் தந்துதவிய அன்பு உள்ளங்களுக்கும் எம் அகமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

18/2, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2880. (19943)(21-14-16)

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

உதயன்

# கட்சியின் முடிவை தலைமை செயற்படுத்த வேண்டும்

தனித்துச் செயற்படும் எண்ணத்தைக் கைவிட்டு புலிகளின் வழி செல்லும் முடிவை மீள உறுதிப்படுத்தியிருக்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணி.

தமிழினத்தின் நலனைக் கருத்திற்கொண்டு, இன ஒற்றுமையைப் பேணிச் செயற்பட வேண்டும் என்றும் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், புலிகளின் வழியில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை கட்சியின் மூத்த தலைவர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா போன்றோர் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றனர்.

தமிழ் மக்கள் நேசித்த பல தலைவர்கள் கடந்த காலத்தில் இன நலனுக்காக எடுத்த முயற்சிகள் பலன்தராமல் போனதை காரண காரியங்களோடு, அவர்கள் எடுத்து விவரித்திருக்கின்றனர்.

"புலிகளின் ஆயுதப் போராட்டமும் இராணுவ வலிமையுமே இன்று தமிழினத்துக்கு உரியதை - உரிமையை - வழங்கியே தீரவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு அரசுத் தரப்பைத் தள்ளி விட்டிருக்கின்றன. இந்தநிலையில், யதார்த்தத்தை உணர்ந்து புலிகளுக்கு முழுமனதோடு ஆதரவு வழங்கப்படும் விதத்தில் நடந்துகொள்வதுதான் இனத்துக்காக நாம் ஆற்றும் வரலாற்றுக் கடமையாகும். புலிகளின் சமாதான முயற்சிப் போராட்டத்துக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கும் விதத்தில் கூட்டணி செயற்பட வேண்டுமேயொழிய அதற்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது" - என்றும் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். அதனை நிறைவேற்றுக் குழு ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

அதேபோன்று, கட்சி நலனைப் புறந்தள்ளிவிட்டு - இனத்தின் ஒற்றுமை அத்தியாவசியமாகத் தேவைப்படும் இச்சமயத்தில் - தமிழ்க் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளோடு சேர்ந்து இயங்குவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

மூன்றாவது விடயமான - கட்சித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிமீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை - இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதா, ஏற்றுக்கொள்ளப்பட்டதா - என்ற விடயம் - சர்ச்சைக்குரியதாகி அது குறித்து ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கூட்ட அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட பின்னரே உண்மை நிலை தெளிவாகும்.

எனினும், கூட்டத்தில் பொதுக்கருத்து எட்டப்பட்ட முதல் இரண்டு விடயங்களும் முக்கியமானவை. அவை:-

★ கூட்டணி தனித்துவ எண்ணத்தைத் தவிர்த்து புலிகளின் வழி செல்லவேண்டும்.

★ தமிழ்க் கூட்டமைப்பில் ஏனைய கட்சிகளோடு சேர்ந்து இயங்கி, ஐக்கியத்தைப் பேணவேண்டும்.

- இந்த இரண்டு விடயங்களிலும் திட்டவட்டமான பொதுக்கருத்து எட்டப்பட்டிருப்பதால் கூட்டணியின் தலைமைத்துவத்தை யார் வகித்தாலும், அவர்கள் இந்த இரு தீர்மானங்களையும் - முடிவுகளையும் - உறுதியாகப் பின்பற்ற வேண்டிய கடப்பாடுடையவர்களாகின்றார்கள்.

எனவே, கூட்டணியின் தலைவரான தன்மீது கட்சித் தொண்டர்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர் என்று கூறிக்கொள்ளும் ஆனந்தசங்கரிக்கும் இந்தக் கடப்பாடு உள்ளது.

முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு குட்டையைக் குழப்பிவிட்டு, அதன்பின்னர், "நான் புலிகளுக்கு எதிரானவன் அல்லன்" என்று விளம்பரப்படுத்தி தனது தலைமைப் பதவியைத் தக்க வைத்துக்கொள்ள முயல்வதை விடுத்து, கட்சியின முடிவை - தீர்மானத்தை - குழப்பமன்றி முழு அளவில் செயற்படுத்தும் விதத்தில் அவர் நடந்துகொள்வதுதான் நல்லது.

புலிகளின் வழி செல்ல கூட்டணி தீர்மானத்திருப்பதால், அந்த வழியில் கட்சியை வழி நடத்துபவராக அதன் தலைவர் இருப்பதுதான் நியாயமானது; பொருத்தமானது.

கட்சி உறுப்பினர்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

---

தூதரகங்களில் இணைக்கப்பட்ட

## அதிகாரிகள் குழுவினர் நேற்று யாழ். வருகை

யாழ்ப்பாணம்,ஜூலை8

இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகள் ஆகியவற்றில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கான கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ். வந்தது.

நேற்றுக்காலை யாழ். வந்த 16பேர் அடங்கிய இக்குழுவினர் யாழ். செயலகத்தில் அரச அதிபர் எஸ்.பத்மநாதனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் மற்றும் அபிவிருத்திப் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்புக்கள், நிறுவனங்கள் தொடர்பாக அரச அதிபர், அவர்களுக்கு எடுத்துக்கூறினார்.

யா[illegible]ாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்தோர், மீளக்குடியமர்ந்து[illegible]ார் மற்றும் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தொடர்பாகவும் - போரினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பாகவும் இக்குழுவினர் அரச அதிபரிடம் இருந்து விரிவான தரவுகளைப் பெற்றுக் கொண்டனர். (எ-8)

---

## நாட்டு நடப்பு

### மேன்மை ஏது பெண்களே!

நல்ல குலம் நல்ல பண்பு
நல்ல இடத்துப் பையன் தான்
கல்வி கேள்வி ஞானமதில்
கரை கடந்த மேதைதான்

பல்கலைக் கழகம் தன்னில்
பாடம் பல புகட்டுவான்
நல்ல பல திருமணங்கள்
நாளும் பேசி வருகிறது

மெல்ல தலை வழுக்கை என்று
மெல்லியர்கள் வெறுக்கின்றார்
நல்ல பண்பு மிக்கவரை
நாடு மதித்து போற்றுது

மெல்ல உதிரும் கேசத்திற்கு
மேன்மை ஏது பெண்களே!

- விகடகவி

---

நல்லூர் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளில்

## நீரிழிவு, தோல் நோய்களுக்கு சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

**வைத்திய பொறுப்பதிகாரி தகவல்**

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நீரிழிவு மற்றும் தோல் நோய்களுக்கு சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேற்படி பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்திய அதிகாரி திருமதி எஸ்.மகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான சூழல் உருவாகிய பின்னர் எமது ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்குரிய மருந்து வகைகள் போதியளவில் கிடைக்கப்பெறுகின்றன.

இதனால், ஆயுர்வேத வைத்தியசாலைகளை நாடி வரும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் கீழ் கொக்குவில், கேணியடி, திருநெல்வேலி, கோண்டாவில் முதலான இடங்களில் ஆயுர்வேத வைத்தியசாலைகள் இயங்கிவருகின்றன.

இவற்றில் ஒவ்வொரு மாதமும் சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் வைத்திய உதவி பெற்று வருகின்றனர்.

இவர்களில் நீரிழிவு மற்றும் தோல் நோய்களுக்கான சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. குழந்தைகளுக்கான சிகிச்சைகளும் இங்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

இன்று ஆயுர்வேத மருந்துகளைப் பாவிப்பதில் 'பத்தியம்' கடைப்பிடிக்கும் முறைகளும் இலகுவாக்கப்பட்டுள்ளன. இதனால ஆயுர்வேத மருந்துகளைப் பாவிப்பதில் அதிகமானோர் அக்கறை காட்டி வருகின்றனர் - என்றும் தெரிவித்தார். (எ-12)

---

## குடாநாட்டின் புனரமைப்பு பணிகளில் யு.எஸ்.எயிட் அமைப்பும் இணையும்

**செயலகக் கலந்துரையாடலில் தீர்மானம்**

யாழ்ப்பாணம்,ஜூலை8

யு.எஸ்.எயிட் அமைப்பு குடாநாட்டில் பல அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. இந்தப் பணிகளை மேற்கொள்ள அரச அதிபர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ்.வந்துள்ள அமெரிக்க தூதுக் குழு மேற்கண்டவாறு அரச அதிபரிடம் கோரியுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பதில் தூதர டொனால்ட் காம் தலைமையிலான குழு நேற்று யாழ்.அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடிய சமயமே இப்படிக் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

தரைவழியாக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இக்குழுவில் தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரி கிறிஸ் லோங், பொதுமக்கள் தொடர்பு அதிகாரி பத்மினி இராஜதுரை ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

யாழ்.செயலகத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்த இக்குழுவினர், குடாநாட்டின் தற்போதைய நிலைகுறித்துக் கேட்டறிந்தனர்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளில் யு.எஸ்.எயிட் அமைப்பும் பங்குகொள்ள விரும்புகின்றது. இந்த அமைப்பு மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை முன்வைத்தால் அவற்றுக்கான நிதி உதவியை வழங்க முடியும் என்று குழுவினர் தெரிவித்தனர்.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் அதன்போது எதிர்நோக்கும் தடைகளை நீக்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குழுவினர் இந்தச்சந்திப்பில் எடுத்துக்கூறினர். (எ-3-8)

---

## கைவினைப்பொருள் பூங்கா சிகிரியாவில் அமைக்கப்படும்

கைவினைப் பொருள்களுக்கான முதலாவது பூங்கா ஒன்று மத்திய மாகாணத்தின் சிகிரியாவில் விரைவில் அமைக்கப் படவுள்ளது.

இதனால் பெரும் எண்ணிக்கையான கைவினைப் பொருள் தயாரிப்பவர்கள் பயனடைவர்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிகிரியாவைப் பார்ப்பதற்காக வரும் வெளிநாட்டுப் பயணிகள் இவர்களின் கைவினைப் பொருள்களை வாங்குவதன் மூலம் இவர்கள் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அரசாங்கம் கருதுகின்றது.

வரலாற்றுப் புகழ்மிக்க சிகிரியாவில் அமைக்கப்படும் இந்தப் பூங்காவில் சுமார் 100 வரையானோர் ஒரேநேரத்தில் உற்பத்தி மற்றும் பயிற்சியில் ஈடுபடக்கூடியதாக இருக்கும்.

மத்திய பொறியியல் அதிகார சபை இந்தப் பூங்கா அமைப்பதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது. ஆரம்பக்கட்ட மதிப்பீடுகளின படி 2 கோடி ரூபா செலவில் பூங்கா அமைக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் கைவினைப் பொருள்கள் எப்படி அதன் பாரம்பரியத்துடன் தயாரிக்கப்படுகின்றன என்பதை ஆக்குவேறு ஆணிவேறாக அறிந்து கொள்ளத்தக்க வகையில் இந்தப் பூங்கா அமைந்திருக்கும். (ம)

**நாளை**

ஆனி 24
புதன்கிழமை
(09.07.2003)
திதி : தசமி
முற்பகல் 10.25
நட்சத்திரம்: சுவாதி
முற்பகல் 7.56வரை.
சுபநேரம் : 4.28-5.58
ராகுகாலம் : 11.58-1.28
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

'பிறருக்கு நீ செய்துள்ள உதவிகள் என்னென்னை என்று எண்ணு' பிறகு எழுந்து மேலும் செய்! உன் வாழ்வு சிறப்படையும்.

---

## நல்லூரில் மேலும் 120 பேருக்கு ஜூலை முதல் மாதாந்த உதவிப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள 120பேருக்கு புதிதாக மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படவுள்ளதாக சமூக சேவை உத்தியோகத்தர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட - ஆதரவற்றவர்களுக்கே இந்த உதவிப்பணம் வழங்கப்படுகின்றது என்றும் - அவர் கூறினார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் குடியமர்ந்துள்ளவர்களில் இத்தகைய வசதியற்றோரின் விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன. (எ-12)

---

## மகாநாயக்க தேரர்களை யாழ். அழைத்துச் செல்லத் தயார்

**அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு**

ஹட்டன்,ஜூலை8

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த கண்டி அஸ்கிரிய பீடாதிபதியும், மல்வத்தை மகாநாயக்க தேரரும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள். அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச்செல்லத் தயாராக இருக்கிறேன்.

- இவ்வாறு அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியா சென்.ஜோசப் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடந்த வைபவத்தில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அமைச்சர் சந்திரசேகரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "ஒரு சமூகத்தின் விழிப்புணர்வுக்கு கல்வி அறிவு அவசியமாகும் வடக்கு - கிழக்கு மக்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கியதால்தான் தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள்.

"நாட்டில் இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்றுவந்த யுத்தத்தின் கோர விளைவுகளை தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் உணர்ந்துள்ளன. எனவே, சமாதானத்துக்கான குரல் ஓங்கி வருகின்றது.

"அதேவேளை, தமிழ் மக்களின் போராட்டம் வெற்றிபெற வேண்டுமானால் தமிழர்கள் மத்தியில் போராட்ட உணர்வை ஏற்படுத்துவது போல, சிங்கள மக்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தவேண்டும் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தெளிவுபடுத்தியுள்ளேன் - என்றார் அமைச்சர்.(எ)

## 10 ஆவது ஆண்டு கண்ணீர் நினைவுகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 - 05 - 1941 | 08 - 07 - 1993 |

### அமரர் சிதம்பரி மகேந்திரன்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தவரே!
வானுறையும் தெய்வமாக நெஞ்சத்துள் நிறைந்தவரே!
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் நினைவுகள்
நீங்காது என்றென்றும் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்!

(21-15-16)

பத்தாண்டு சென்றிடினும் பாசமுகம்
மறவாது உங்கள் நினைவோடு வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

நாமகள் வீதி, உடுவில்.
தகவல்:
K.பாஸ்கரன் (ஹொலண்ட்) (19930)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 - 02 - 1950 | 08 - 06 - 2003 |

### அமரர் கனகசபை இராசலிங்கம்

பண்புடன் பாரினில் வாழ்ந்து மறைந்த பாசமுள்ள தந்தையே!
எம்முடன் வாழ்ந்த நாள்கள் என்றும் எம் நெஞ்சைவிட்டகலா.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி கிழக்கு, இணுவில். (19687) (21-15-16)

## 14 ஆவது ஆண்டு நினைவு தினம்



| மண்ணரங்கில் | விண்ணரங்கில் |
|---|---|
| 11 - 02 - 1924 | 08 - 07 - 1989 |

### அமரர் நடிகமணி V.V.வைரமுத்து

கலையுலகில் தடம்பதித்து நிலையுயர்ந்த கோமகனே!
நிலவுலகில் நிகரில்லா நடிகமணி ஆனவனே!
பல வடிவங்களைத் தாங்கி உயிரூட்டிய பல்கலைக்கழகமே!
நிலையில்லா உலகினிலே நிற்கின்றாய் அழியாமல் என்நாளும் நீ.

(21-15-16)

துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்.

'சாரங்கா' பிரதான வீதி,
காங்கேசன்துறை. (19895)

## இராஜகோபுரத்துக்கு வியாழனன்று அடிக்கல்

அச்சுவேலி,ஜூலை8

ஆவரங்கால் சிவன்கோயிலில் புதிதாக நிறுவப்பட்டுள்ள இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நடும் விழா நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை நடைபெறும். (எ-4-11)

## ஆரியம்பிட்டி மயானத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

நவாலி, ஆரியம்பிட்டி இந்து மயானம் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

மானிப்பாய் பட்டின உப - அலுவலகமும் - மானிப்பாய் கிராம உப அலுவலக ஊழியர்களும் இணைந்து மேற்படி சிரமதான நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என பிரதேச சபை செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார்.

எதிர்வரும் 11ஆம் திகதி மேற்படி சிரமதானம் இடம்பெறும் என்றும் - அவர் கூறினார். (எ-185)

## ஆரியகுளம் சீர்கெடுகிறது

கொழும்புத்துறை,ஜூலை8

ஆரியகுளத்தின் மேற்பரப்பு முழுவதும் ஆகாயத்தாமரை மற்றும் தாமரைக்கொடிகள் படர்ந்து காணப்படுகின்றது.

இதனால், கோடைகாலத்திலும் நுளம்புகள் வெகுவாகப் பெருகி மலேரியா போன்ற நோய்களைப் பரப்பி வருவதாக இப்பகுதி பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாநகரசபை நிர்வாகம் இக்குளத்தின் துப்புரவுப் பணியில் அசிரத்தை காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-30)

## கிராம அபிவிருத்தி அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள்

வடக்கு - கிழக்கில் சேவையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வட்டியில்லாக் கடனில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

கிராம அபிவிருத்தி திணைக்களமும், 'நீரப்' நிறுவனமும் இணைந்து மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது.(எ-182)

## சுகாதார சஞ்சிகை வெளியானது

கிளிநொச்சி,ஜூலை8

கிளிநொச்சி சுகாதார அதிகாரி பணிமனையின் 'விழி' மாதாந்த மருத்துவ இதழ் வெளிவந்துள்ளது.

விசநாய்க்கடி, வன்னியில் டெங்கு, மலேரியா நிலைவரம், டெங்குக் காய்ச்சலிலிருந்து பாதுகாப்பாக இருப்போம், சின்னமுத்து மற்றும் வலிப்புநோய் தொடர்பான ஆலோசனைகள் உட்படப் பல கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது 'விழி'. (ஜூ-ரி-5)

## வலி.தென்மேற்கில் இலவச ஆயுர்வேத மருத்துவ சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை8

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபை இலவச ஆயுர்வேத மருத்துவ சேவையை மூன்று நிலையங்களில் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை மாதகல் உப அலுவலகத்திலும் -

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்திலும் -

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை மானிப்பாய் பட்டின உப அலுவலகத்திலும் மருத்துவசேவை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபையைச் சேர்ந்த டாக்டர் திருமதி த. விஜயரத்தினம் சிகிச்சை வழங்குவார்.(எ-185)


### காணி தேவை

இளம் குடும்பமொன்று யாழ். பிரதேசத்தில் மீளக்குடியேறுவதற்கு 4 பரப்புக் காணி தேவைப்படுகின்றது. காணி யாழ். - பலாலி வீதிக்கு அருகில், திருநெல்வேலிச் சந்திக்கு அப்பால் விரும்பத்தக்கது. விற்க விரும்புபவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும். இடைத்தரகர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். தொடர்புகளுக்கு:
T.P.No. 0341118692443
(21-19-14-18) (19874)



### இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, இடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

★ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED BY:
SITHARA PRODUCTS,
PUTTALAM ROAD.
(REG.NO: 6382) AR/PR/No. 228

(21-15-19)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். TP:222 2567.


## நெஞ்சை விட்டகலா ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 01 - 1927 | 03 - 07 - 1998 |

### அமரர் கதிரித்தம்பி கந்தசாமி

கண்ணுக்குள் மறையவில்லை உங்கள் முகம்
நெஞ்சைவிட்டு அகலவில்லை உங்கள் நினைவு
ஆண்டுகள் தான் ஐந்து சென்றாலும் - எம் வாழ்வில்
உங்கள் அன்பு எம்மை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மசாந்திக்காக வைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

துயர்பகிரும்:
அன்பு மனைவி திருமதி சிவபாக்கியம் கந்தசாமி
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (19854) (21-15-16)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 - 01 - 1927 | 29 - 06 - 2001 |

### அமரர் கந்தையா மாசிலாமணி

என்ன மாதவம் செய்தோம் யாம்
தந்தையாய் எமக்கு நீர் வாய்த்திட?
அன்புடன் எம்மை அரவணைத்தீர்!
புன் முறுவல் பூத்தே புகழுடன் நாம் வாழ
நன்னெறி பகிர்ந்து நல்வழி காட்டினீர்!
துன்பத்தில் துடிக்க விட்டு
மின்னலாய் மறைந்தீர் என் செய்வோம்?

(21-15-19)

கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (19798) - குடும்பத்தினர்.

## பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1950 - 03 - 03 | 1988 - 06 - 23 |

### அமரர் வாரித்தம்பி சின்னத்தம்பி

ஆண்டுகள் பதினைந்து பறந்தோடிப் போனாலும்
ஆறிடுமோ எம்துயரம் அறுந்திடுமோ உமதன்பு?
என்றும் உங்கள் நினைவாக நித்தம் நாம் வாழுகின்றோம்
இறைவன் திருவடியில் நினைவுத் தீபம் ஏற்றி வைப்போம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (19933) (21-15-16)

# மிலேனியம், ஜனாதிபதி புலமைப்பரிசில்கள் மீண்டும் வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கு!

கல்முனை,ஜூலை8

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இடைநிறுத்தப்பட்டிருந்த மிலேனியம் புலமைப் பரிசில், ஜனாதிபதியின் விசேட புலமைப்பரிசில் ஆகியவை மீண்டும் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கான நடவடிக்கைகளை மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனா மேற்கொண்டுள்ளார்.

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்காக 2000ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வந்த இவ்விரு புலமைப்பரிசில்களும் கடந்த வருடம் முன்னறிவித்தல் எதுவுமின்றி வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்களுக்கு நிறுத்தப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக தேசிய முஸ்லிம் கவுன்ஸில், தென்கிழக்கு கல்விப்பேரவை உட்பட பல்வேறு அமைப்புகளும் மாகாண ஆளுநருக்கு மகஜர்களை அனுப்பியிருந்தன. இதையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஆளுநர் நடத்திய பேச்சுக்களின் பயனாக இப்புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் இப்பகுதி வறிய மாணவர்களுக்கு மீண்டும் கிடைக்கவிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான மிலேனியம் புலமைப்பரிசில் 1,384 பேருக்கும் தரம் 6முதல் தரம் 11வரையான மாணவர்களுக்கான ஜனாதிபதியின் விசேட புலமைப்பரிசில் 2,737 பேருக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் 2002ஆம் ஆண்டு தொடக்கம் மாதமொன்றுக்கு 250ரூபா வீதம் வருடத்தில் 10மாதங்களுக்கு வழங்கப்படும். இப் புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பான உத்தியோகபூர்வ வைபவம் ஒகஸ்ட் முதலாம் திகதி திருகோணமலை கடற்படைத் தளத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்துகொள்வார் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ஏ)

# யாழ். வலய ஆசிரியர்களுக்கு சைவசமயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 1 முதல 5 வரையான வகுப்புகளில் சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை காலை 8.30மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தொடக்கவுரை நிகழ்த்துவார். 'தரம் 1 முதல் 5வரையுள்ள சைவசமய பாடநூல்கள் பற்றிய மதிப்பீடு' என்னும் தலைப்பில் சைவப்புலவர் சு.செல்லத்துரையும், 'திருமுறை கற்பித்தல்' என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி கலா பொன்னம்பலமும் கருத்துரை வழங்குவர்.

'ஆரம்பக்கல்வி சமயபாட ஆசிரியர் நடிப்பாங்குகள், கற்றல் கற்பித்தல் முறைகளில் புதிய பிரவேசங்கள்' என்னும் தலைப்பில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் உரையாற்றுவார்.

தொடர்ந்து 'சமயபாடம் கற்பித்தல்' என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசுவும் - 'பிரச்சினைகளும் தீர்வுகளும்' என்னும் பொருளில் சைவபுலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும் விளக்கவுரை நிகழ்த்துவர்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புக்களுக்குரிய சமய பாடநூல்களை எடுத்து வரவேண்டுமென சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி கேட்டுள்ளார். (ஏ-4)

# பாடசாலைகள் தோறும் மாணவர் நட்புறவு மன்றம்

## நிறுவக் கோருகின்றது கல்வி அமைச்சு

அச்சுவேலி,ஜூலை8

பாடசாலைகள் தோறும் மாணவா நட்புறவு மன்றங்கள் நிறுவப்பட்டு, மாணவர் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாகவே இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மாணவர் மத்தியில் தொடர்பாடல், தலைமைத்துவம், மானுட மேன்மை, அழகியல் உணர்வை வளர்த்து எதிர்கால வாழ்வை திறன் விருத்தி மிக்கதாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே இம்மாணவர் நட்புறவு மன்றங்கள் நிறுவப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர் நட்புறவு மன்றங்களை அடுத்து கோட்ட நிலையிலும் பாடசாலை நட்புறவுமன்றப் பிரதிநிதிகளை உள்ளடக்கி நட்புறவு மன்றங்களை நிறுவுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(ஏ-11)

# பாடசாலை மாணவர்களுக்கு சின்னமுத்து தடுப்பு ஊசி

அச்சுவேலி,ஜூலை8

குடாநாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு சின்னமுத்து நோய்த்தடை மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

1999ஆம், 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் சின்னமுத்து தடைமருந்து பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றப் பட்டது. இரண்டாவது தடவையாக இந்த வருடம் தடைமருந்து ஏற்றப் படுகின்றது.

சின்னமுத்து நோய்த்தடை மீள் சக்திபெறும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10வயது தொடக்கம் 14வயது வரை உள்ள மாணவர்களுக்கே இந்த நோய்த்தடை மருந்து ஊசி ஏற்றப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச மருத்துவத்தாதிகள் ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் பாடசாலைகள் தோறும் நேரடியாகச் சென்று மாணவர்களுக்கு தடைஊசி மருந்துக்களை ஏற்றி வருகின்றனர். (ஏ-4-11)

# கிளிநொச்சியில் ஆயிரத்து 200 பேருக்கு கடந்தவாரம் மீள்குடியமர்வு கொடுப்பனவு

கிளிநொச்சி,ஜூலை8

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு கடந்தவாரம் 25ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட 'நிகோட்' பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பார்த்திபன் இதனைத் தெரிவித்தார்.

இதுவரையும் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த சுமார் 5ஆயிரம் குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

ஏனையோருக்கும் மிக விரைவில் வழங்குவதற்குரிய நடவடிககைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஏ-5-றி)

# தேசிய பாடசாலைகள் பட்டியல் கல்வி அமைச்சால் மீள் வியூகம்

கொழும்பு,ஜூலை8

மாகாண சபைகளின் கீழுள்ள அரசாங்கப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தும் நடவடிக்கைகளை கல்வி, கலாசார, மனிதவள, அபிவிருத்தி அமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது என அமைச்சின் செயலாளர் வி.கே.நாணயக்கார அறிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளுக்கான அடிப்படைத் தகைமைகள் எதுவுமில்லாத பல பாடசாலைகள் முறையற்ற விதத்தில் கடந்த காலங்களில் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறான பாடசாலைகளை மீளவும் மாகாண சபைகளிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் கல்வி அமைச்சுக்கு ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சகல தகுதிகளும கொண்டுள்ள பல முன்னணிப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படாது புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான குறைகளை ஆராய்வதற்காக கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு குழுவொன்றை நியமித்துள்ளார்.

இக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் அதன் பரிந்துரைகளுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என செயலாளர் அறிவித்துள்ளார்.

தற்போது 323 தேசிய பாடசாலைகள் இருக்கின்றன. கல்வி அமைச்சின் மீள்வியூகத் திட்டத்தின் கீழ் தகுதியற்ற தேசியப் பாடசாலைகள் மாகாண சபைகளிடம் மீண்டும் ஒப்படைப்பதுடன் தகுதியான முன்னணிப் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



வழக்கம்பரை செ.சபாநாயகர் நினைவு மண்டபம், சபாநாயகர் நினைவுச் சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட மண்டபத்தின் தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

(படம்: சுழிபுரம் செய்தியாளர்)

# கரும்புலிகளின் வரலாறு அடங்கிய புதிய புறநானூறு எழ வேண்டும்

## கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தெரிவிப்பு

வலி.வடக்கு,ஜூலை8

கரும்புலிகளின் வீரம், அர்ப்பணிப்பு, துணிச்சல் என்பவற்றைக் கொண்டு புதிய புறநானூறு ஒன்று எழுதப்பட வேண்டும் அத்துடன் வீர மறவர்களின் காவியத்தை எழுதுவதற்கு நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்; உறுதியுடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்.

வலிகாமம் கோட்ட கரும்புலிகள் நினைவுநாள் நிகழ்வுகள் கடந்த சனியன்று மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் அமைந்துள்ள மாவீரர் கலையரங்கில் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் கு.குலசிங்கம் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும்போது ஒரு பாடலுக்கான கருத்தை புரிந்துகொள்வதில் மிகவும் சிரமப்பட்டேன் ஆனால் இன்று அப்பாடலுக்கான விளக்கம் மிகவும் இலகுவாக எனக்குப் புரியக்கூடியதாக உள்ளது.

இந்தப் பாடல் இற்றைக்கு 2ஆயிரத்து 500ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதாகும். அதாவது, ஒரு தாயின் பிற்காலத்திலே பிறந்த ஒரு மகன் போர்க்களம் சென்று வீரமறவனாக இறந்ததையும், தாயினுடைய உணர்ச்சியையும் இப்பாடல் வெளிப் படுத்தி நிற்கின்றது.

போர்க்களம் சென்ற மகன் போர்களத்தே பல யானைகளைக் கொன்று தானும் வீரமரணம் அடைந்தான். இந்தச் செய்தி மக்களுக்குக் கிடைக்கின்றது. அதேபோன்று, தாயினுடைய செவிக்கும் இச்செய்தி கிடைக்கின்றது.

முதலில் தனது மகன் வீரனாக இறந்தான் என்பதைக் கேட்டதும் முகத்தில் மலர்ச்சியும், சந்தோஷமும் ஏற்படுகின்றது. சில நிமிடத்தில் இனி என் மகனைக் காணமுடியாது - பார்க்க முடியாது என்றவுடன் அவள் கவலை கொள்வதையும் அவதானிக்க முடிகிறது.

அதாவது, எமது மொழியிலே எழுதப்பட்ட பாடலுக்கான கருத்தைப் புரிவதில் எனக்கு அன்று இருந்த கஷ்டம் இன்று சில சம்பவங்களை - நிகழ்வுகளை என் கண்முன் நிறுத்திப் பார்க்கும்போது அந்தத் தாயின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இன்று உலகின் முன் நாம் நிமிர்ந்து நிற்கின்றோம் என்றால், அதற்கு வரலாற்றுவீரன் மில்லர் முதல் காரணம் ஆகின்றான். தனது மண்ணையும், மக்களையும் காப்பாற்றச் சென்ற வீரன் வீரமரணம் அடைகின்றான்.

இச்செய்தியானது எதிரியை அழித்துத் தானும் அழிந்தது முதலில் மகிழ்ச்சியாக இருந்தாலும், மறுகணம் வீரனின் மரணம் பெரும் சுமையாக அமைகின்றது. இத்தகைய சுமைகளை இறக்கி வைப்பதற்காகவே நாம் வருடாந்தம் இவ்மாவீரர்களின் நினைவு நாள்களைக் கொண்டாடுகின்றோம்.

ஒரு மகன் களத்திலே வீரனாக இறக்கின்றான் என்பது பிள்ளை பிறந்த போது இருந்த மகிழ்ச்சியிலும் பார்க்க இரண்டு மடங்கு கூடிய மகிழ்ச்சியைக் கொடுப்பதாக புறநானூறும் பாடல் கூறுகின்றது.

நானும் கரும்புலிகள் பலருடன் பழகியுள்ளேன். அவர்களுடைய மகிழ்ச்சி, சந்தோஷம், இன்பத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. கரும்புலி வீரர்களின் வரலாற்றினை இன்று புதிய புறநானூறு ஒன்று தோன்றியுள்ளது.

புறநானூறு பாடப்பட்டபோது இருந்த போர்முறை அழிந்து இன்று புதிய யுத்திகளுடன் கூடிய போர்முறை இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றது. இதற்கு மில்லர், அங்கயற்கண்ணி மட்டுமல்ல இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கானவர்கள் வழி சமைத்துள்ளார்கள்.

இன்று நாம் தமிழர்கள் என்று கூறிக்கொண்டு உலகின் முன் நிமிர்ந்து நிற்கின்றோம் என்றால் வெடித்துச்சிதறிய கரும்புலிகள் காட்டிய துணிச்சலும், வீரமுமே காரணம் ஆகும். இந்தத் தற்கொடையாளர்களின் கொடையானது உலக மக்களினால் வியப்புடன் பார்க்கப்படுவதுடன் பாராட்டவும் படுகின்றது.

உலகம் தமிழ்மக்களை மதிக்கின்றது அல்லது பயப்படுகின்றது என்றால் அதற்குக் காரணம் இந்தக் கரும்புலிகளின் ஆற்றல்தான். இதற்கு நாம் செய்யக்கூடிய கைங்கரியம் அவர்களை நினைவில் நிறுத்தி மதிப்பளிக்கவேண்டும்.

இவ்வீரர்களுடைய வரலாறுகள் காவியமாகவோ, கதைகளாகவோ, கவிதைகளாகவோ வெளிவர வேண்டும். இதற்கு நாம் இந்தக் காவிய புருஷர்களின் தாய், தந்தை, உற்றார், நண்பர்களிடம் இருந்து தகவல்களைத் திரட்டி அதற்கு வேண்டிய முன்செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் - என்றார். (ஏ-86)



அச்சுவேலி 'நிக்ஷன்' பல்பொருள் வாணிப நிலையத்தில் திருட்டு நடைபெற்றதையிட்டு 'சிலிங்கோ காப்புறுதிக் கம்பனி' காப்புறுதித் தொகையாக ஒரு லட்சத்து 85ஆயிரம் ரூபாவை வழங்கியது. சிலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் யாழ்.கிளை பொது முகாமையாளர் ம.பார்த்தீபனிடமிருந்து இதற்கான காசோலையை வியாபார நிலைய உரிமையாளர்களான செல்வரட்ணம் தம்பதியர் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

## உடற்கல்வித்துறை மாணவர் கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை 3ஆம் அணி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை (09.07.2003) புதன்கிழமை காலை 9.30மணிக்கு உடற்கல்வித் துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும்.

அனைவரும் தவறாது வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

தலைவர்
உடற்கல்வித்துறை மாணவர் மன்றம்.

(19960) (28-16-18)

## வாழிய நின்சேவை

சமூகசேவையாளரும், ஆலயங்களின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவைகள் செய்பவரும், வேணி களஞ்சியம், வேணி ரான்ஸ்போர்ட் உரிமையாளரும், வேலணை சிற்பனை முருகன் ஆலய பரிபாலனசபையின் பொருளாளரும், புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவிற் திருப்பணிச் சபையின் உபதலைவரும், வேலணை முடிப்பிள்ளையார் ஆலயசபை, பசுப்பாதுகாப்பு ஒன்றியம், தீவக அரிமாக்கழகம், தீவக செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினருமாகிய



### திரு.கு.கங்கைவேணியன்

அவர்கள் 30.06.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவரது பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வேலணை மேற்கு,
வேலணை.

(19957) (28-16-18)

க.இளங்கோவன்
குடும்பத்தினர்

## உணவகங்களுக்கு நற்சான்றிதழ்

ஊர்காவற்றுறை,ஜூலை8

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்து சிறந்த முறையில் இயங்கும் உணவகம் தெரிவு செய்யப்பட்டு அதற்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் இவ்வாறு சிறந்த உணவகம் தெரிவு செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பிரதேச சமுதாய எழுச்சிவிழா அன்று அதற்கான சான்றிதழ் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-16)

## சமய அறிவுப்போட்டி

ஊரெழு, கிளானைப்பதி ஸ்ரீபர்வதவர்த்தினி மனோன்மணி அம்பாள் ஆலய உற்சவத்தை முன்னிட்டு, ஊரெழு சைவாலய முன்னேற்றக்கழகம் மாணவர்கள் மத்தியில் சமய அறிவுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும மாணவர்கள் போட்டிக்குரிய விண்ணப்ப படிவங்களை மேற்படி கழகப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் முதலிடம் பெறும் மாணவர்களுக்குத் தங்கப்பதக்கமும் ஏனைய 10 மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ-ரி-10)

## உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி தெற்கு தோப்பைச் சேர்ந்த எமது நண்பன்

### திரு. சின்னத்தம்பி நடேசமூர்த்தி

(இலங்கை வங்கியின் கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்)

அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகப் பதவியேற்றமையையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதோடு, அவரது சமூகப பணிகள் மேலும் தொடர உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/28813) (28-16-18)

அச்சுவேலி வாழ் நண்பர்கள்

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 05.07.2003 சனிக்கிழமை நீர்கொழும்பில் காலமான




### திருமதி அந்தோனிப்பிள்ளை எலிசபெத்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (C/28811) (28-16-18) -உறவினர்கள்.

## மலிவு விலையில்

## காணி விற்பனைக்கு




### மலிவு விலையில் காணி விற்பனைக்கு

சுன்னாகம் - சந்தி, மல்லாகம் சந்திகளுக்கு இடைநடுவில் கிழக்கு பக்கமாக ¼ மைல் தூரத்தில் ஏழாலை தெற்கில் 13½ பரப்பு "டானா"பட்ட காணி ஆதிகாலந்தொட்டு கொங்கிறீற் தூண்களால் சுற்றி அடைக்கப்பட்டு தற்சமயம் இலந்தை கொப்புகளால் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. தெற்மேற்குப் பக்கமாக ஒழுங்கை முகப்பாக நாலுபரப்பு லூதர் ஜெயசிங்கம் எனக்குறிப்பிட்ட காணி மேற்கு ஒழுங்கை முகப்பாக 31 பனைகள் உண்டு. தென்மேற்குப் பக்கம் வீடு கட்டவும், வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரம் கமம், தென்னைகள், வாழைத்தோட்டம் செய்ய உகந்த காணியாக இருக்கிறது. 31 பனைகள் மாத்திரம் தப்பியிருக்கின்றன. வடக்குப் பக்கமாக சில பனைத்துண்டுகள் அடுக்கப்பட்டிருக்கின்றன. ஒழுங்கை ஓரமாக எனது காணி பனைகள் கிளப்பி அகற்றப்பட்டதால், சிறு பள்ளத்தரையாகத் தென்படுவதால் தென்னங்கன்றுகள், வாழைத்தோட்டம் செய்ய உகந்ததாயும் இருக்கின்றது. நெற்பயிர் செய்யவும் உகந்ததாகும். மற்றைய காணிகளிலும் பார்க்க இக்காணி விலை குறைத்தே உள்ளது. கடைசி விலை ஒரே விலை.

வடக்குப் பக்கமாக இருக்கும் சிறு குளத்துக்கும் இக்காணிக்கும் மண்வரம்பு இருக்கிறது. இக்குளத்தில் மாரிகாலத்தில் மாத்திரம் நீர் இருக்கும். தெற்குப் பக்கத்தில் கல்வீடுகள் இருக்கின்றன. வடக்குப் பக்கமாக இலங்கை போக்குவரத்துச்சேவை உள்ளது. ஐந்து நிமிட நடை, வடக்குப் பக்கமாக வாழைத்தோட்டம், சைக்கிளில் சுன்னாகம் சந்தை, மயிலணிப் பள்ளிக்கூடம், மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை ஆகிய இடங்களுக்குப் போகலாம். சைவசன்மார்க்க வித்தியாசாலையும் அண்மையில் உண்டு. விழிசிட்டி, சூராவத்தை ஆகிய இடங்களில் இக்காணியில் இருந்து கால்மைல் தூரத்தில் இருபக்கங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்கள் உண்டு. ஆழமில்லாத கிணறு வெட்டி நல்ல குடிதண்ணீர் எடுக்கலாம். (பரப்பு மிகக் குறைந்த விலை ரூபா 30,000)

ரூபா 30,000 X 13½ பரப்பு= 405,000. மொத்தவிலை நாலு லட்சத்து ஐயாயிரம் ரூபா. பாதுகாப்பு நிமித்தம் முழுப்பணமும் வங்கியினூடாக கொழும்புக்கு தந்தியின் மூலம் அனுப்பி பின்புதான் உறுதி, காணி கைம்மாறுதல் யாவும். தரகர் தேவையில்லை.

மேற்பார்வையாளர் : ஆ. சண்முகராசா
இளைப்பாறிய ஸ்ரேசன் மாஸ்ரர்,
தேவாலயம் முன்பாக, சூராவத்தை, சுன்னாகம்.

(19817) (14-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அந்தோனிப்பிள்ளை எலிசபெத்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது நீர்கொழும்பில் வசித்தவருமான திருமதி அந்தோனிப்பிள்ளை எலிசபெத் 05.07.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ரதி, அன்ரன் மற்றும் அகஸ்ரீன், தர்மசீலன்(ஜேர்மனி), மனோகரசீலன்(லண்டன்), காலஞ்சென்ற அனஸ்ரீன் மற்றும் அல்வினஸ்(ஜேர்மனி), கிறிஸ்ரபெல்(ஜேர்மனி), ரெறன்ஸ்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிறின்சி(நீர்கொழும்பு), செல்லையா, ஜசிந்தா, பிலோமினா(நீர்கொழும்பு), றெஜினா(ஜேர்மனி), அமற்றாஸ் (ஜேர்மனி), ஜசிந்தா(ஜேர்மனி), ஜெனதாஸ், ரஞ்சன்(ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் சாந்த(நீர்கொழும்பு), ரேணுகா(நீர்கொழும்பு), மார்ஷல், பச்சல், சேர்ச்சில், மாபெல், இசபெல், பொபி, பிரசன்னா (நீர்கொழும்பு), விஸ்வா(நீர்கொழும்பு), பிர்தீபா(நீர்கொழும்பு), பிந்து(நீர்கொழும்பு), அசங்க(நீர்கொழும்பு), றொனி(ஜேர்மனி), யூலி(ஜேர்மனி), ரமறா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். அதுபற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 10, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(19963) (28-16-18)

தகவல்:
பிள்ளைகள்.

### வைரமுத்து செல்வரத்தினம்

(மறவன்புலோ)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்வரத்தினம்(முன்னாள் கிளை முகாமையாளர், தெ.மே.ப.நோ.கூ.சங்கம், கைதடி) அவர்கள் நேற்று (07.07.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (ஆசிரியர், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.), தேவந்தினி(ஆசிரியை, யா/பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தி.), சுபாஜினி(யா/போதனா வைத்தியசாலை), தர்சினி, பகீரதன்(யாழ்.செயலகம்), காலஞ்சென்ற பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கீதாஞ்சலி, பாபு ஆகியோரின் அன்பு மாமனாரும் தரங்கிதா, கவிராம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34/4, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(19966) (29-28-16-18)

தகவல்:
செ.பாஸ்கரன்
(மகன்)

### ந. ஆறுமுகம் வைத்தியலிங்கம்

(முன்னாள் பிரதம பொறியியலாளர், இலங்கை புகையிரத திணைக்களம்)

இலங்கை புகையிரதத் திணைக்கள முன்னாள் பிரதம பொறியியலாளர் ந. ஆறுமுகம் வைத்தியலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி மீனாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகம்(புங்குடுதீவு) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரவாகு(கொக்குவில்) தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 14A, Elibank Road, Colombo-5 இலிருந்து இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு மாலை 5.00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30 4/5, விவேகானந்த வீதி,*
*கொழும்பு - 6.*
*T.P.01-554118*

(C/28814) (29-28-16-18)

தகவல்:
S.பஞ்சாட்சரவேல்

# தமிழீழம் தனித்தேசம் என்பதனை காவல்துறை கட்டமைப்பு உணர்த்தும்

## பொறுப்பாளர் நடேசன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை8

எமது தேசம் தனிநாடு என்பதனை காவல்துறை நிர்வாகக் கட்டமைப்பு அரசியல் ரீதியில் பறைசாற்றியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

மாங்குளத்தில் அண்மையில் நடைபெற்ற பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறிய காவல்துறை உறுப்பினர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தீவில் இரண்டு இனங்கள், இரண்டு தேசங்கள், இரண்டு ஆட்சிப் பீடங்கள் இருக்கின்றன என்பதற்கு யதார்த்த பூர்வமான தக்கசான்றாக இரண்டு காவல்துறை நிர்வாகங்கள் உள்ளன.



இதன் மூலம் தமிழீழம் வேறு, ஸ்ரீலங்கா வேறு என்பது வெளிப்படையாகின்றது.

காவல்துறையின் வளர்ச்சி சர்வ தேச ரீதியில் எமது தேசத்திற்கும் விடுதலை இயக்கத்திற்கும் தலைவருக்கும் புகழையும், வெற்றியினையும் ஈட்டித்தந்துள்ளது.

இன்றையநாள் காவல்துறை ஒரு படி வளர்ச்சியைப் பெறுகின்ற நாளாக உள்ளது. தமிழர்கள் தனியான தேசத்தைக் கொண்டவர்கள், தனியான இறைமையுடைய வரலாற்றைக் கொண்டவர்கள் என்பதனை இந்நாள் எடுத்தியம்புகின்றது.

எமது தனிப்பட்ட அரசியல் வாழ்வுக்காக நாங்கள் போராட்டம் நடத்தவில்லை. பதவிகளையும், பட்டங்களையும் முடிசூடிக் கொள்வதற்காகப் போராடவும் இல்லை.

தனிப்பட்ட ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தி, சுகபோக வாழ்க்கையினைத் துறந்து, தேச விடுதலைக்காகவே நாம் போராடுகின்றோம். அதற்காக அனைவரும் உழைக்கவேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுடன் இரட்டிப்பான பணி காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் க்களத்திலும் காவல்துறையின் பங்களிப்பு வேண்டப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அரசு எமக்கு நீதியான, நியாயமான தீர்வினை வழங்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. போராடியே எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய சூழலுக்கு அரசு எம்மைத தள்ளுகின்றது.

நாம் விரும்பி போராட்டத்திற்கு திரும்பச் செல்லமாட்டோம். ஆனால், போராட நிர்ப்பந்திக்கப்பட்டால் நாம் போருக்குத் தயார், அதேபோன்று சமாதான வழி மூலமான பேச்சுக்கும் நாம் பின்னிற்கவில்லை.

சட்டம், ஒழுங்கைப் பேணுவது மட்டும் உங்கள் பணியல்ல, தமிழீழத்தில் சமூக மறுமலர்ச்சியை உருவாக்க அனைவரும் உழைக்க வேண்டும். இதுவே எமது தலைவரின் விருப்பமும் ஆகும்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஸ்ரீலங்காப் பொலீஸாரால் எமது மக்கள் மிரட்டப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும் - என்றார். (எ-78)




**உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 'உள்ளூராட்சி எழுச்சி விழா' அச்சுவேலி பஸ்நிலைய அரங்கில் அண்மையில் நடைபெற்றது.**

**இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வீ.கிருஷ்ணசாமி அவர்களுக்கு அச்சுவேலி உப அலுவலக பொறுப்பதிகாரி மாணிக்கவ:சகர் மாலை சூட்டி வரவேற்பதைப் படத்தில் காணலாம். வலி.கிழக்கு பிரதேச சபை உபசெயலாளர் குகதாசன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.பாஸ்கரன் ஆகியோரும் அருகில் உள்ளனர்.**

*(படம்:அச்சுவேலி செய்தியாளர்)*

# அரச அதிகாரிகள் சகல பகுதிகளிலும் பணியாற்ற வழிசெய்தவர்கள் புலிகள்

## மட்டக்களப்பு அரச அதிபர் உரை

காத்தான்குடி,ஜூலை8

அரச அதிகாரிகள் சகல பகுதிகளுக்கும் சென்று அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய சமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தியவர்கள் விடுதலைப் புலிகள்தான். எதிரிகளைத் தோற்கடித்ததன் மூலம் இந்நிலை சாத்தியமாகியுள்ளது. ஒரு காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அரச அதிபர், அதிகாரிகளால் செல்ல முடியாதிருந்தது. இந்நிலை இன்று மாறிவிட்டது.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் கீழான பாதுகாப்பு, நிவாரண மீளளிப்பு இயக்கத்தை இராணுவக் கட்டுப்பாடற்ற கரடியனாறு கிராமத்தில் ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் இத்திட்டத்தின்கீழ் தம்பான்வெளி வீதி புனரமைக்கப்படவுள்ளது.

அரச அதிபர் இங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கடந்த இருபது வருடகால யுத்தத்தில் அனைத்தையுமே இழந்து விட்டோம். எங்களிடம் மிஞ்சியிருப்பது கொஞ்ச உயிர்கள்தான். அந்த உயிர்களைக் காப்பாற்ற உழைத்து வாழவேண்டும். உழைக்காதவர்களுக்கு சமூகத்தில் மரியாதை கொடுகக் கூடாது" - என்றார்.

புலிகளின் மட்டு. - அம்பாறை பொருண்மிய பொறுப்பாளர் நிசா, கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சாமித்தம்பி உட்படப் பலர் பேசினர். (எ)

# ஊர்காவற்றுறையில் 50 வீடுகள் ஜி.ரி.இசற் விரைவில் நிறுவும்

ஊர்காவற்றுறை,ஜூலை8

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் ஐம்பது வறிய குடும்பங்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

இதற்கென நாரந்தனை தெற்கில இருந்து முப்பது குடும்பங்களும், நாரந்தனை வடக்கில் இருந்து பத்து குடும்பங்களும், நாரந்தனையில் இருந்து பத்து குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பலர் வன்னிப் பகுதிகளில் இருந்து அண்மையில் மீளக்குடியமர்ந்தவர்களாவர். இவர்களது சொந்த வீடுகள் தீவுப் பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வினால அழிவடைந்துள்ளன. இதனால் பல குடும்பங்கள் இதுவரை மீளக்குடியமர்ந்தவர்களது வீடுகளிலேயே தற்காலிகமாக வசித்து வந்தன எனக் கூறப்பட்டது.

இவர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மேற்படி 50குடும்பங்களுக்கு மழைகாலம் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் வீடுகளை முழுமையாகக் கட்டி முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

# வாசகர் திருமுகம்

## புற்றுநோய் வைத்திய நிபுணருக்கு போதிய ஒத்துழைப்புக் கொடுங்கள்

15.06.2003 அன்று உதயன் பத்திரிகையில் வெளியான வாசகர் திருமுகம் பகுதியில் "புற்றுநோய் வைத்திய நிபுணருக்கு போதிய ஒத்துழைப்புக் கொடுங்கள்" என்ற தலைப்பில் 'ஒரு நோயாளி - சுழிபுரம்' என்பவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள விடயங்களை தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

"புற்றுநோயாளர்களின் நன்மை கருதி சில நடவடிக்கைகள் அவசரமாக மேற்கொள்ளப்பட்டதால் புற்றுநோய் சிகிச்சை வழங்குவது தொடர்பாக சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்டு இவற்றை நிவர்த்தி செய்வதற்கு படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். உடனடியாக எல்லா வசதிகளும் நூறுவீதம் ஏற்படுத்திக்கொடுக்க முடியாதிருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் மக்களின் நன்மை கருதி இவற்றைப் பொறுத்துக்கொண்டு சேவையைத் தொடரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்."

*பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,*
*சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.*

வைத்திய கலாநிதி
க.தா.சிவபாதம்

## எமது கதி என்ன?

தேசிய கல்வியியற் கல்லூரிகளின் சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள் அனைத்தும் மிகவும் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவது மிகவும் உன்னதமான விடயம். ஆனால், வயதுக்கட்டுப்பாடு என்னும் விடயம் எம்மை சற்று காயப்படுத்துகின்றது. இந்த வயதுக் கட்டுப்பாட்டினால் பல திறமையான மாணவர்களின் எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாக்கப்படுவது மட்டுமன்றி முற்றுப்புள்ளி வைக்கும் சம்பவமே இடம்பெறுகின்றது.

அதாவது 'இடம்பெயர்வு........ மற்றும் நோய்வாய்ப்பட்டு, இன்னும் பல்வேறு காரணங்களால் குறிப்பிட்ட வயதில் பரீட்சை எடுக்காமல் தாமதமாக எடுத்த மாணவர்களின் எதிர்காலம்......? இருட்டுப்பாதையில் குருட்டுப் பூனையாய் ஆகிவிடுகிறது.

ஆகவே, இவ்வாறான மாணவர்களின் நன்மை கருதி நுண்கலைத் துறையில் கற்கும் மாணவர்களின் வயது எல்லை 25 என்பதை நீக்கி' கூடுதலான வயது எல்லையை விதித்து எமது எதிர்கால வாழ்விற்கு ஒளியேற்றி வைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆர்.சயந்தகுமார்
பாதிக்கப்பட்ட மாணவர்களின் சார்பில்
*கொக்குவில்.*

### தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு

# அரசியலமைப்புக்கு வெளியில் வந்து அரசியல் நடத்துங்கள்!

## பேரினவாதக் கட்சிகளுக்கு ரமேஸ் அழைப்பு

புரையோடிப்போயுள்ள தமிழர் பிரசசினையைத் தீர்க்க வேண்டுமேயானால் தென்னிலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் இலங்கையில் தற்போதுள்ள அரசியலமைப்புக்கு வெளியில் வந்து செயலாற்ற வேண்டும்.

- இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த.ரமேஸ்.

கடந்த சனிக்கிழமை வாழைச் சேனையில் நடந்த கரும்புலிகள் தின வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரமேஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்தபோது ஒவ்வொரு தமிழரின் வீட்டிலும் பிரச்சினையிருந்தது. பின்னர் அது சிங்களவர்களின் ஒவ்வொரு வீட்டுப் பிரச்சினையானது.

கரும்புலிகளின் தியாகம் தமிழரை அசைக்க முடியாத, பலம்வாய்ந்த சக்தியை உருவாக்கியது. தமிழரின் விடிவுக்காகத் தம்மை அர்ப்பணித்த கரும்புலிகள், இன்று யுத்தம் ஓய்வதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கும் காரணமாகியுள்ளனர்.

போரினால் எவ்வளவோ அழிவுகள் இடம்பெற்று பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நிலை வந்துள்ளது. இன்று சர்வதேசங்களும் சமஷ்டி முறையில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று தென்னிலங்கை ஆட்சியாளருக்கு வலியுறுத்தி வருகின்றன. ஆயினும், பிரதமரும் ஜனாதிபதியும் தமிழர்களுக்கு எதையும் வழங்க விரும்பவில்லை.



எத்தனையோ ஆத்திரமூட்டும் சம்பவங்கள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம் எமது தேசியத் தலைவர் மிகவும் பொறுமை காத்து வருகின்றார்.

1948 ஆம் ஆண்டு முதல் சிங்கள தேசம் தமிழர்களின் தார்மீகப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியே வந்துள்ளது. நாம் பயங்கரவாதிகள் அல்லர். விடுதலைப் போராளிகள் என்பதை அமெரிக்கா உட்பட பல நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் நாம் கலந்துகொண்டிருந்தால் எமது பிரச்சினை தீர்ந்து விட்டது என அங்கு பேசப்பட்டிருக்கும். பெருமளவு நிதியும் கிடைத்திருக்கும். அந்த நிதியைக் கொண்டு சிங்கள தேசம் கட்டியெழுப்பப்பட்டிருக்கும். இதைக் கருத்திற்கொண்டே எமது தலைவர் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளாமலிருக்க சமயோசிதமாக முடிவெடுத்தார்.

எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கக் கூடிய போர் வல்லமையுடன் நாம இருக்கிறோம். உலக நாடுகள் விரும்பும் சமஷ்டி முறையைக் கூட சிங்கள அரசாங்கம் கொடுக்கத் தவறினால் நாம் மீண்டும் ஆயுதப் போராட்டத்தின மூலம் தீர்வு காண்பதை யாராலும் தடுக்க முடியாது.

ஒவ்வொரு தமிழ்க்குடும்பமும் போரின் ஊடாக வெற்றி காண்பதற்கும் தயாராக இருக்கவேண்டும். பெரும் போர் நிகழ்ந்து ஓய்வுபெற்று பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்று வருகின்ற இந்தச் சூழ்நிலையில் குறைந்த பட்சத் தீர்வுக்குக் கூட சிங்கள தேசம முன்வராமலிருப்பது எம்மைத் தொடர்ந்து ஆத்திரமூட்டும் செயலாகவே கருதவேண்டியுள்ளது. நாம் தொடர்ந்தும் ஏமாறத் தயாரில்லை

- இவ்வாறு கூறினார் ரமேஸ்.

மட்டக்களப்பு, பேத்தாளை, அம்பாறை, சொறிக்கல்முனை, திருக்கோயில், செங்கலடி, இழுப்படிச்சேனை ஆகிய இடங்களிலும் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன், திலக் குயிலின்பன், பாவா மற்றும் லெப்டினன்ட் கேணல் ரெஜி, மேஜர் இந்து ஆகியோர் மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

அம்பாறையில் நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளுக்கு இராணுவ கமாண்டர் மத்தியஸ்தம் வகித்தார். சைக்கிளோட்டப் போட்டிக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

வீரமரணமடைந்த நான்கு கரும்புலி போராளிகளின் அன்னையர் ஈகச்சுடர் ஏற்றினர்.

"இன்னுமொரு போர் மேகம்" என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. தூயவன் இந்த நூலை எழுதியிருந்தார். (எ)

# சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,ஜூலை8

நாரந்தனை, சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய கும்பாபிஷேக தின அஸ்டோத்திர சத சங்காபிஷேகம் இன்று காலை 10.00மணிக்கு நடைபெறும். (எ-117)

வடமராட்சி,ஜூலை8

அல்வாய் மாலுசந்திப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 16ஆம் திகதி ரதோற்சவமும், மறுநாள் 17ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (எ-173)

வடமராட்சி,ஜூலை8

அல்வாய் வடக்கு, வட்டிக்களவை விறுமர் கோவில் வருடாந்த வேள்வி உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை இரவு பொங்கலுடன் ஆரம்பமாகி மறுநாள் புதன்கிழமை வேள்வி நடைபெறுவதுடன் நிறைவுறும். (எ-173)

வடமராட்சி,ஜூலை8

தென்புலோலி, புற்றளை சித்தி விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை ரதோற்சவமும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (எ-173)

குருநகர்,ஜூலை8

குருநகர் கார்மேல் அன்னையின் வருடாந்த திருவிழா நாளை புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ஆராதனைகளைத் தொடர்ந்து எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணிக்கு நற்கருணை வழிபாடும், மறுதினம் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் தொடர்ந்து அன்னையின் திருச் சொரூப ஆசீரும் இடம்பெறும். (எ-51)

## ஆவணங்கள் தவறிவிட்டன

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சி.தர்மகுலசிங்கம் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் (MD-90) பதிவுசெய்வதற்கான ஆவணங்கள் 05.07.2003 சனிக்கிழமை முகமாலை - மிருசுவில் - கட்டுவரம் - தில்லையம்பலம் பாதையில் கைதவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி மினிபஸ் சங்கக் காரியாலயத்துடன் அல்லது 021-2263403 இலக்க தொலைபேசி அல்லது கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சி. தர்மகுலசிங்கம்
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
(சி-28812) (31-12-18)


# SCREEN PRINTING

ஸ்கிறீன் பிறிண்டிங் வேலைகள் நவீன முறையில்

திருமண அழைப்பிதழ்,
விசிட்டிங் காட்,
போஸ்ரர்கள், பிளாஸ்டிக்
பொருட்கள், பை வகைகள்,
துணிவகைகள்
எல்லாவற்றிலும் பிரிண்டிங்

அருண் பிரிண்டர்ஸ்

இல:361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(உதயன் கட்டடம்)


உ
சிவமயம்



## காரைநகர் பண்டத்தரிப்பான்புலம்
## சிவகாமி அம்பிகாசமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமாள் தேவஸ்தான
# மஹாகும்பாபிஷேக விழா நிகழ்வுகள்

**08.07.2003 செவ்வாய்க்கிழமை (ஆறாம் நாள் நிகழ்வுகள்)**

காலை 7.00 மணி முதல் விநாயக வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகி பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அர்ச்சனை, வேத, திருமுறை, அபிராமி அந்தாதி பாராயணங்கள் நடைபெற்று நண்பகல் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நிகழும்.

மாலை 5.00மணிக்கு விக்னேஸ்வர பூஜையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விசேட கலை நிகழ்ச்சிகள் : நாதஸ்வர – தவில் இன்னிசை

நாதஸ்வரம் : தமிழ்நாடு அரசவைக் கலைஞர்கள் கலைமாணிகள் திருப்பாம்பரம் சகோதரர்கள் T.K.S. சுவாமிநாதன, T.K.S. மீனாட்சி சுந்தரம்

தவில் : சொற்சுவைச் செல்வர் தவில் செம்மல் திருநாகேஸ்வரம் T.R.சுப்பிரமணியம் இசைமாமுரசு குசாசவூர் K.G.கல்யாணசுந்தரம்

**09.07.2003 புதன்கிழமை**

அதிகாலை 4.00மணி முதல் விநாயக வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி
காலை 8.30 மணிக்கு ஸ்தூபிகும்பாபிஷேகம்.
தொடர்ந்து காலை 10.20 மணிக்கு மஹாகும்பாபிஷேகம்.

பிற்பகல் 2.00 மணிக்கு மஹா அபிஷேகம் நடைபெற்று மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) இடம்பெறும்.

மாலை 5.00மணிக்கு திருக்கல்யாணம் நடைபெற்று சுவாமி திருவீதியுலா நடைபெறும்.

☞ இக்கும்பாபிஷேக நிகழ்வுகளுக்காக ஈழத்து சிவாசாரியார்களுடன் இந்தியாவிலிருந்து சிவநெறிச் செம்மல் D.R.சிவஸ்ரீ பிச்சைக்குருக்கள் அவர்களின் சீடர்கள் வேத பாராயணத்துக்கும் தேவார பஞ்சபுராண பாராயணத்துக்கும் ஓதுவார் மணி சபாபதி தேசிகர் ரட்ண சபாபதி வருகை தந்திருக்கின்றனர்.

மங்கள இசை வழங்க ஆலய ஆஸ்தான வித்துவான் மு.வீராம்சாமி குழுவினரும் இந்தியாவிலிருந்து வந்துள்ள தமிழ்நாடு அரசவைக் கலைஞர்கள் கலைமாமணிகள் திருப்பாம்பரம் சகோதரர்கள்

நாதஸ்வரம் : T.K.S. சுவாமிநாதன், T.K.S. மீனாட்சி சுந்தரம்

தவில் : சொற்சுவைச் செல்வர் தவில் செம்மல் திருநாகேஸ்வரம் T.R.சுப்பிரமணியம் இசைமாமுரசு குசாசவூர் K.G.கல்யாணசுந்தரம் ஆகியோரும். இவர்களுடன் ஈழத்துக் கலைஞர்களான

இணுவில் K.R.சுந்தரமூர்த்தி குழுவினர், கோண்டாவில் V.K.பஞ்சமூர்த்தி குழுவினர், இணுவில் T.உதயசங்கர் இணுவில், N.R.S.ரவீந்திர, சுழிபுரம் R.சிவகுமார், சாவகச்சேரி M.P.நாகேந்திரன்,

ஆகியோரும் வாசிப்பார்கள்.

### கலைநிகழ்வுகள்

மயில்வாகனம் குழுவினர் காவடி நடனம்.
ஈழத்துக் கலைஞர்கள் இசை நாடகம்.
காரைநகர் கலைஞர்களின் இசை நிகழ்வுகள்.

அடியார்கள் அனைவரும் வருக! ஆண்டவன் திருவருள் பெறுக!!

பண்டத்தரிப்பான் புலம்,
காரைநகர்.
(19964) (31-12-18)
-ஆலய ஆதீனகர்த்தாக்கள்.

## நாதஸ்வரக் கலைஞர்
## நலன் பெறப் பிரார்த்தனை

ஈழத்திருநாட்டின் பிரபல நாதஸ்வர வித்வான் N.K.பத்மநாதன் அவர்கள் கடும் சுகயீனமடைந்த நிலையில் கொழும்பு "அப்பலோ" வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக அறிந்தோம். இந்நிலையில் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆறுதல் கூறி நிற்கின்றோம். மேலும் அவர் உடல் நல்ல சுகம்பெற்று நல்லை முருகன் ஆலயத்தில் இசைமாரி பொழிந்து முருகனை மகிழ்விக்க வேண்டுமென முருகன் பக்தர்களும் தங்கள் இரசிகர்களும் நல்லூர் கந்தன் சேமிப்புக்கழக அங்கத்தவர்களும் சமூக அபிவிருத்தி மன்றத்தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் அவர்களும் பிரார்த்திக்கின்றார்கள்.

363, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (19959) (29-12-18)

நல்லை முருகனை வேண்டும்,
திருமதி றோஸ் நவநீதம்
ஜெகதீசன்.

## வாழிய நின் சேவை



சமூகசேவையாளரும் வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய பரிபாலனசபையின் செயலாளரும், வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை உறுப்பினரும், ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய உபதலைவரும், ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக பொருளாளரும், காலி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய நிர்வாகசபை உறுப்பினரும், தீவக செஞ்சிலுவைச் சங்க உறுப்பினருமாகிய திரு. தி.பாலச்சந்திரன் அவர்கள் 30.06.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவரது பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வேலணை மேற்கு,
வேலணை.
(19958) (31-12-18)

க.இளங்கோவன்,
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 05 . 11 . 1938
ஆண்டவன் அடியில் 29 . 06 . 2001

### அமரர் செல்லத்தம்பி அமரசிங்கம்

அன்பினால் அரவணைத்த என்னவரே!
ஆண்டுகள் இரண்டானாலும்
ஆறுமோ உங்கள் நினைவலைகள்
அன்பனாம் உங்கள் மகனையும் அரவணைத்ததேனோ?
ஆறாது என் சோகம் மாறாது உங்கள் நினைவுகள்.

'அன்பு நிழல்'
465/3, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.

மனைவி திலகவதி
மற்றும் குடும்பத்தினர்.
(19968) (31-12-18)

## துயர் பகிர்கிறோம்

வேலணை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
திரு.சு.செல்வராசா அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சுப்பிரமணியம் சேதுப்பிள்ளை** அவர்கள்

2003.07.01ஆம் திகதி புதுக்குடியிருப்பில் காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு, வேலணை.
(சி-28818) (31-12-18)

பிரதேச நலன்புரிச் சங்க
அங்கத்தவர்கள்.

## மரண அறிவித்தல்

### செல்வன் சிறிஸ்கந்தராசா சிறிஸ்வரன் (பாவு)

வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சிறிஸ்கந்தராசா சிறிஸ்வரன் 05.07.2003 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிறிஸ்கந்தராசா - சந்திரலீலா ஆகியோரின் அன்பு மகனும் நந்தினி (ஜேர்மனி), லோகநிதி, சிறிதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுரேஷ்குமார் (ஜேர்மனி), லோகேஸ்வரன் (முரசுமோட்டை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விதுஷா (ஜேர்மனி), மதுஷா, லதுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், அமிர்தம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஞானாம்பிகை (வேலணை) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாட்டி இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சிறிஸ்கந்தராசா (தந்தை)

5ஆம் வட்டாரம்
(மணியகாரன் வீட்டருகில்),
வேலணை வடக்கு.
(19971) (31-12-18)

# அன்றாட உணவில் பழங்களையும் சேர்ப்போம்

அனைத்து உயிர்களுக்கும் உணவு ஒரு முக்கிய தேவை. நம் உணவு, பசிபோக்க உணவு என்று இல்லாதபடி வளமாக, நலமாக வாழ வைக்கும் உணவு என்று இருக்க வேண்டும். அதற்குத் தேவை சத்துள்ள சமச்சீர் உணவு.

### சமச்சீர் உணவு


சமச்சீர் உணவு என்றால் என்ன? அது எப்படி அமைந்திருக்க வேண்டும் என்றும் பார்ப்போம். நாம் உண்ணும் உணவுப் பொருள் எரிந்து உடலுக்குத் தேவையான சக்தியைத் தருகிறது. இப்படி சக்தி தரக்கூடிய பொருள்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மாச்சத்து, கொழுப்பு, புரதம் முதலிய சத்துக்கள் ஒருங்கு சேர்ந்து 2,400 கலோரிசக்தி அளிக்கவேண்டும். உணவின் எடையைப் பன்னிரெண்டு பங்கு வைத்தால் ஏழுபங்கு மாச்சத்தும் மூன்று பங்கு கொழுப்புச்சத்தும் இரண்டு பங்கு புரதச்சத்தும் பெறும்படியாக உணவு அமையவேண்டும்.

அவை தவிர, காப்புப் பணிபுரியும் சத்துக்களான விற்றமின்களும் கனிமங்களும் தேவை. உடலின் சுவாசம், இரத்த ஓட்டம் போன்ற முக்கிய செயல்களைச் செய்யும் ஜீவ அணுக்கள் நடத்தும் இரசாயனச் செயல்களுக்கு விற்றமின்களும், கனிமங்களும் தேவை. உடலுக்குத் தேவையான மேற்கூறிய சத்துக்கள் அனைத்தும் கொடுக்கக் கூடிய உணவே சமச்சீர் உணவு.

விற்றமின்கள் ஏ,பி,சி,டி,ஈ,கே என பலவகைப் பிரிவுகளாக உள்ளன. உடல் நலத்திற்கும், வளர்ச்சிக்கும் இரும்புச்சத்து, கல்சியம், பொஸ்பரசு, மங்கனீசு, சோடியம் போன்ற கனிமங்கள் உதவுகின்றன. அதனால் நம் உணவு அரிசி, கோதுமை, பருப்பு, பயறு, பால், மீன், கீரைகள், பழங்கள் என்று அமைய வேண்டும்.

### விற்றமின் ஏ

இது வளரும் குழந்தைகளுக்கு மிக அவசியமானது. உடல் வளர்ச்சிக்கு அவசியமானது மட்டுமன்றி, தொற்று வியாதியிலிருந்தும் காப்பாற்றுகிறது. இந்த விற்றமின் சத்துக்குறைந்தால் கண்பார்வைக் கோளாறுகள், வளர்ச்சிக் குறைவு, எடைகுறைவு, சுறுசுறுப்பின்மை, தொற்று நோய்கள், சுவாச நோய்கள், இளநரை போன்ற கோளாறுகள் ஏற்படலாம். விற்றமின் ஏ உடலிலுள்ள ஜீவ அணுக்களின் ஆற்றலைத் தூண்டக்கூடியது. இது குறைவுள்ளவர்கள் விரைவில் தொற்று நோய்க்கு ஆளாகின்றனர். பொதுவாக மீன் எண்ணெய், பால், முட்டை, கரட்



போன்றவற்றிலிருந்தும், விலைகுறைந்த அகத்திக்கீரை, முட்டைக்கோவா, முளைக்கீரை, மல்லிக்கீரை, கறிவேப்பிலை முதலியவற்றிலிருந்தும் பெறலாம்.

### விற்றமின் ஏ உள்ள பழங்கள்

தக்காளி, மாம்பழம், பப்பாளி, பேரிச்சம்பழம், பலாப்பழம், தோடம்பழம், வாழைப்பழம்.

### விற்றமின் பி உள்ள பழங்கள்

பேரிச்சம்பழம், எலுமிச்சம்பழம், தக்காளி, மாம்பழம், தோடம்பழம் நாரத்தை, பப்பாளி, பேரிக்காய், உலர்ந்த திராட்சை முதலியவற்றில் உள்ளது.

### விற்றமின் சி உள்ள பழங்கள்

நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், தோடம்பழம், தக்காளி முதலியவற்றில் அதிக அளவு உள்ளது. அன்னாசி, பேரிச்சம்பழத்தில் சுமாராக உள்ளது. முலாம்பழம், அப்பிள், வாழைப்பழம் இவற்றில் சிறிதளவு உள்ளது.

### கனிமங்கள் மிகுந்த பழங்கள்

சாதாரணமாக நாம் உண்ணும் வாழைப்பழம், அன்னாசி, அப்பிள், மாதுளம்பழம், பேரிச்சம்பழம், கொய்யாப்பழம், திராட்சைப்பழம், சீத்தாப்பழம், நெல்லிக்கனி போன்ற எல்லா பழங்களிலும், அவற்றின் கொட்டைகளிலும் கனிமங்கள் அதிக அளவில் உள்ளன.

### பழங்களை உண்ணும் முறை

பழங்களை உணவுக்குப்பின் அல்லது உணவுடன் கலந்தே பொதுவாக உண்ணுவது நம்நாட்டு வழக்கம். இதை விட நாம் பழங்களின் முழுப் பலனையும் பெறவேண்டுமெனில் அதை ஒருநேர உணவு போல தனியாகவே சாப்பிடவேண்டும். வேண்டுமெனில் பாலுடன் உண்ணலாம். ஒரே நேரத்தில் பலவகைப் பழங்களை உண்பது நல்லதல்ல. வெவ்வேறு வகைப்பழங்கள் இருந்தால் ஒரு வகைப் பழங்களைக் காலையிலும் அடுத்தவகைப் பழங்களை மாலையிலும் உண்ணல் நல்லது.

வெறும்வயிற்றில் பழங்களைச் சாப்பிடலாகாது என்பது தவறான எண்ணம். வெறும் வயிற்றில் பழங்களைத் தாராளமாக உண்ணலாம். பழ உணவின் முழுப்பலனும் அப்பொழுதுதான கிடைக்கும்.

பழங்கள் நன்றாகப் பழுத்திருக்க வேண்டியது அவசியம். ஆனால், அதிகமாகக் கனிந்து அழுகிய நிலைக்குப் போய்விடக்கூடாது. பழங்கள் மரங்களிலேயே பழுப்பது நல்லது. வீடுகளில் பழமரங்கள் வைத்திருப்பவர்களாவது மரங்களிலேயே பழுத்தபின் பழங்களைப் பறிக்கலாம்.

சிலவகைப் பழங்களைத் தோலுடன் உண்பது நல்லது. அப்பிள், பேரிக்காய், கொய்யா, திராட்சை போன்ற பழங்களை நன்கு கழுவிவிட்டு தோலுடன் உண்ணலாம். தோலினை ஒட்டியுள்ள சதைப்பகுதியிலும், தோலிலும் அதிக சத்துப் பொருள்கள் உள்ளன.

தினமும் 100 கிராம் முதல் 200 கிராம் அளவு வரை பழங்கள் சாப்பிட வேண்டும். விலையுயர்ந்த பழங்களில்தான் சத்துள்ளது எனத் தவறாகப் பலர் கருதுகின்றனர். விலை குறைந்த கொய்யா, மாம்பழம், பப்பாளி, நாவற்பழம், நெல்லிக்கனி முதலிய பழங்களும் சத்துள்ளவைதான். அந்தந்தப் பருவகாலங்களில் கிடைக்கக் கூடிய விலை குறைந்த பழங்களை வாங்கி உண்டால் போதுமானது.

### பழச்சாறு

குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும், முதியோர்களுக்கும் பழங்களின் சாற்றைக் கொடுக்கலாம். பிழிந்து 10 நிமிடங்களுக்குள் பருகி விட வேண்டும்.

தக்காளி, எலுமிச்சை போன்ற பழங்களின் சாற்றை சூப் போலத் தயாரித்துப் பருகலாம்.

பலவகைப் பழங்களிலிருந்து ஜாம் தயாரித்துப் பருகலாம். பருவ காலங்களில் அதிகமாகக் கிடைக்கும் பழங்களிலிருந்து ஜாம் முறைப்படி தயாரித்து வைத்துக் கொண்டால் எந்தப் பருவத்திலும் பயன்படுத்தலாம்.

### பழங்களின் கொட்டைகள்

பழங்களில் உள்ள கொட்டைகளிலும் அபூர்வ சத்துக்களும், மருந்துப் பொருள்களும் உள்ளன. பலாக்கொட்டை, மாங்கொட்டை, நாவல் பழக்கொட்டை, முந்திரிக் கொட்டை, வாதாங்கொட்டை போன்றன குறிப்பிடத்தக்கன. பழமரங்கள் பெரிய மரங்களாக இருப்பதால் பெரிய நீண்ட வேர்கள் பல அடிக்கணக்கான ஆழ மண்ணினுள் புகுந்து நீரையும் சத்தையும் உறிஞ்சி, தன் வாரிசான கன்றுகள் வளர உணவைச் சேமித்து வைத்த கருவூலமே கொட்டைகள்! அதனால் மற்ற காய்கறி, கீரைகளில் இல்லாத அபூர்வ கனிமங்கள் கொட்டைகளில் உள்ளன.

மேலும் கொட்டைகளில் மருந்துப் பொருள்கள் அதிக அளவு உள்ளன. ஒரேவகைப் பழத்தை அதிக அளவு உண்டால் சில நோய்கள் ஏற்படும். அந்த நோய் வரவிடாமல் தடுக்கும் சக்தி அப்பழக் கொட்டையில் உண்டு. உதாரணமாக ஒரேநேரத்தில அதிக அளவு மாம்பழங்களை உண்டால் மாங்கொட்டைப் பருப்பு ஒன்றும் உண்டு விட்டால் எந்தக் கெடுதலும் ஏற்படாது.

### மாம்பழம்

முக்கனிகளில் ஒன்றான மாம்பழம் இலக்கியப்புகழ் பெற்றது. பல பா[illegible]களில் இப்பழம் பற்றிய பல கு[illegible]களைக் காணலாம். விற்றமின் ஏ அதிக அளவு உள்ள இப்பழத்தில் விற்றமின்கள் பியும் சியும் சிறிதளவு உள்ளன. கல்சியம், இரும்புச்சத்து, பொஸ்பரசு முதலிய கனிமங்களும் உள்ளன.

மாம்பழம் உடலுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். இரத்தத்தை விருத்தி பண்ணும், உமிழ்நீரை நன்கு சுரக்கச் செய்வதால் ஜீரண சம்பந்தமான நோய்கள், குறைகள் நீங்கும். நல்ல பசியை உண்டாக்கும். மூளை வளர்ச்சிக்கும், அறிவுபூர்வமான வேலை செய்பவர்களுக்கும் இப்பழம் உதவுகிறது. இதயத்திற்கு பலம் கொடுத்து, இதயப் படபடப்பு, இதயநோயைக் குணப்படுத்தும், வாய் நாற்றத்தைப் போக்கும். பற்களுக்கு உறுதியைக் கொடுக்கும்.

கண் சம்பந்தமான நோய்களுக்கு இப்பழம் மருந்தாகும். கண்களிலிருந்து நீர்வடிதல், கண்சிவத்தல், பார்வைமந்தம், மாலைக்கண் போன்ற வியாதியுள்ளவர்கள் தினம் இரவு படுக்கும் முன் மாம்பழம் உண்டு, ஒரு கோப்பை பாலும் பருகி வந்தால் குணமடைவர்.

தோலின சுருக்கம் நீக்கி பளபளப்பாக்கும், மலச்சிக்கலை நீக்கும். மாம்பழமும், நெய்யும் அல்லது மாம்பழமும் தேனும் சேர்த்து உண்ணும் போது பலன் அதிகமாகும்.

மாம்பழத்திலிருந்து ஜாம் செய்யலாம், பழ சொக்லேட் செய்யலாம். மாம்பழத்தின் தோலையும் மென்று தின்பது நல்லது. தோலைச் சீவினால தோலை ஒட்டியுள்ள சதைப் பகுதி வீணாகாதவாறு மெல்லியதாக தோலைச்சீவ வேண்டும்.

### பலாப்பழம்

முக்கனிகளில் ஒன்றான பலா பழங்களிலேயே மிகப்பெரிய அளவைக் கொண்டது.

இப்பழத்தில் விற்றமின் ஏ அதிகளவு உள்ளதுடன் நரம்புகளுக்கு பலத்தைத் தரும். இரத்த விருத்திக்கும் உதவும். பலாச் சுளைகளை அளவோடு உண்ணவேண்டும். பலாச்சுளை, பால் அல்லது தேன் அல்லது பழம் நெய் இவற்றுடன் சேர்த்து உண்ணும் போது அதன் பலன் மிகுதியாகும்.

### பலாக்கொட்டை

இதில் நிறைய மருத்துவகுணங்கள் உண்டு. பலாச்சுளைகளை அதிகமாக உண்டால் ஏற்படும் கெடுதலை நீக்கும். கொட்டைகளை சுட்டும், வறுத்தும், அவித்தும் உண்ணலாம். குழம்பு, கூட்டு வகைகளிலும் சேர்க்கலாம்.


### வாழைப்பழம்

ஏழை மக்களின் அப்பிள் எனக் கருதப்படும் சிறப்பு இதற்கு உண்டு. இதன் சிறப்பை உணர்ந்ததால்தான் நம் முன்னோர்கள் எல்லா விழாக்களிலும்; வைபவங்களிலும் முக்கிய இடத்தில் இதனை வைத்துள்ளனர்.

வாழைப்பழத்தில் சிறந்த மாச்சத்து; புரதம் உண்டு. இந்த மாச்சத்து எளிதில் ஜீரணமாகக் கூடியதால் குழந்தைகளுக்குப் கொடுக்கலாம். இதில் விற்றமின்கள் ஏ,பி,சி போன்ற அபூர்வ சத்துக்களும்; கல்சியம், பொஸ்பரசு, இரும்பு, மங்கனீசு, கந்தகம் போன்ற கனிமங்களும் உள்ளன.

வாழைப்பழத்தின் மென்மையான சதைப்பகுதி குடல் புண் உண்டாகாதவாறு தடுக்கிறது. குடலின் மெல்லிய ஜவ்வுகள், சுவர்ப்பகுதிகள் அமிலங்களால் அரிக்கப்படுவதால்தான் குடல்புண் உண்டாகிறது. அதனால் வாழைப்பழத்தை முறைப்படி உண்டால் குடல்புண் குணமாகும்.

உடலின் நிறத்தை வெண்மையாக்கி உடலின் கனத்தைக் கூட்டும். உடலில் தூய இரத்தத்தைச் சுரக்கச் செய்யும், மூல நோயைக் கட்டுப்படுத்தும், தோல் நோய்களைக்குணமாக்கும், மூளையைப் பலப்படுத்தி



நல்ல நினைவாற்றலைத் தரும். அதனால் மாணவர்கள் மற்றும் அறிவுபூர்வமான வேலையில் இருப்பவர்கள கண்டிப்பாக தினம் ஒன்று அல்லது இரண்டு வாழைப்பழங்களைச் சாப்பிட வேண்டும். குழந்தைகளுக்கும் வாழைப் பழம் தினமும் கொடுக்கலாம். அப்படி உண்ணும் குழந்தைகள் உடல் பலத்துடன் வளரும்.

மலைவாழை, செவ்வாழை, ஏத்தம்பழம், பூவன்பழம், ரஸ்தாளி என்ற பழங்கள் இப்பழவகையில் சிறந்தவையாகும். இவை மருத்துவ குணங்கள் நிரம்பியவை.

உடல் இளைத்தவர்கள் ஏத்தம் பழத்தை இட்டிலித்தட்டில் அவித்து நெய் தொட்டு உண்டுவர உடல் தடித்து அழகு பெறுவர்.

பொதுவாகவே இரவு பாலைப் பருகியபின் வாழைப்பழத்தை உண்டு வந்தால் மலச்சிக்கல் ஏற்படாது. ஆயுள் நீடிக்கும்.

வாழைப்பழத்தைக் காயாக உண்ணக்கூடாது. அதிகம் கனிந்த பழங்களையும் உண்ணக் கூடாது. பழத்தின் மேல் தோலில் கரும்புள்ளிகள் உள்ள பருவம்தான் உண்ண ஏற்ற பருவம் ஆகும்.

### நாவல்பழம்

அதிக முக்கியத்துவம் வாய்ந்த கனி என்பதால் இலக்கியப் புகழ் பெற்றது. மணிமேகலையில் காயசண டிகை சாபம்பெற இக்கனியே காரணம். ஒரு குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே கிடைக்கக் கூடிய கனி நாவற்கனி. வயலெட் நிறம் அல்லது ரோஜா வண்ணத்தில் உள்ள சதைப் பகுதி நல்ல இனிப்பு; துவர்ப்பு; புளிப்பு சுவையுள்ளது. விற்றமின் ஏ அதிக அளவு உள்ள இக்கனி மிகுந்த மருத்துவ குணங்கள் கொண்டது. நீரிழிவு வியாதியை நீக்குவதில் சிறந்தது. வயிற்றுப்புண், வாய்ப்புண் முதலியவற்றை ஆற்றும்.

நாவற்பழங்களைச் சுத்தமாகக் கழுவிவிட்டு சிறிது சீனி அல்லது உப்புப்போட்டு குலுக்கி வைத்துவிட்டு சில நிமிடங்கள் கழித்து உண்பது நல்லது. பழங்களைச் சாறு எடுத்தும் பருகலாம். நாவல் பழங்களைப் பிசைந்து கொட்டைகளை நீக்கிவிட்டு அதே அளவு சீனி சேர்த்துக் காய்ச்சினால் பாகுகிடைக்கும். இதை காலை, மாலை உண்டு வந்தால் நல்லது.

### நாவற்பழக்கொட்டை

இது மிகவும் மருத்துவப் பயன் உள்ளது. பழத்தை கனியும் பருவத்தில் மட்டும்தான் உண்ணமுடியும். ஆனால், கொட்டைகளைக் காயப் போட்டு பத்திரப்படுத்தினால் ஆண்டு முழுவதும் உண்ண முடியும். நீரிழிவு வியாதிக்காரர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். கொட்டையைத் தூளாக்கி வைத்துக்கொண்டு ஒரு கரண்டி தூளை வாயில் போட்டு தண்ணீர் அல்லது பால் பருகலாம்.

### அப்பிள்

ஒரு நாளைக்கு ஒரு அப்பிள் பழம் உண்டுவந்தால மருத்துவரிடம் போகத தேவையில்லை என்பது ஒரு பிரபல பழமொழி. ஆனால், அப்பிள் பழத்திலுள்ள சத்துக்களை விட பப்பாளிப்பழத்திலும், மாம்பழத்திலும், நெல்லிக் கனியிலும் அதிக சத்துக்கள் உள்ளன.

### நெல்லிக்கனி

அதியமான ஔவைக்கு அளித்த தன் மூலம் நெல்லிக்கனி இலக்கியப்புகழ் பெற்றது. இதில் பலவகைக் கனிமங்களும் விற்றமின் சியும் விற்றமின் பி1, பி2வும் அதிகம் உள்ளன. ஒரு நெல்லிக்கனியிலுள்ள சத்துப்பொருள்கள் இரண்டு தோடம் பழங்களில் உள்ள சத்துக்கு நிகர் என்பர். விற்றமின் சி உஷ்ணத்தில் அழிந்துவிடக் கூடியது. பழங்களைப் பறித்து நேரம் ஆக ஆகக் குறைந்து விடக் கூடியது. அதனால், பச்சையாக நெல்லிக்கனியை உண்ணுதல் நல்லது. சிறு பிள்ளைகள் உண்பதையும் தடுத்தல் கூடாது. நெல்லிக்கனியை உணவில் சேர்த்துக் கொள்பவர்கள் இளமைப்பொலிவுடன் விளங்குவர். பொதுவாகப் பெரியவர்கள் இதை விரும்பி உண்பதில்லை.

### பப்பாளிப்பழம்

இப்பழத்தை ஏழைகளின் அப்பிள் எனலாம். ஆனால், உண்மையில் அப்பிளைவிட சத்துமிகுந்தது. இதில் விற்றமின் ஏ மிக அதிக அளவு உள்ளது.


மேலும் கர்ப்பவதிகள் சாப்பிடக் கூடாது என்ற தவறான கொள்கையும் உலவி வருகிறது. ஆரம்ப காலத்தில் சாப்பிட ஒருவேளை பயப்படலாம். உண்மையில் அது தேவையற்ற பயம். வளரும் கருவிற்கு பப்பாளிப்பழம் உதவுகிறது. உண்மையில் வளரும் கரு வலுவுடன் வளரவும், நோய் தடுக்கும் சக்தி பெறவும், மூளைவளர்ச்சி பெறவும், நல்ல கண்பார்வை பெறவும், அறிவுள்ள குழந்தையாக வளரவும் உதவுகிறது. பப்பாளிப்பழத்தில் பி1, பி2 மிக அதிகம் உள்ளன. விற்றமின் சியும் கணிசமாக உள்ளது. இவை அப்பிளில் உள்ளதைவிட அதிகம்.

பப்பாளிப்பழம் அடிக்கடி சாப்பிடுபவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படாது. பொதுவாகத் தொற்றுநோய் பரவினாலும் அவர்களைத் தொற்றாது. நோயை எதிர்க்கும் சக்தி அவர்களிடம் உருவாகிவிடும். சொறி, சிரங்கு குணமாகும். உடலில் காயம் ஏற்பட்டாலும் விரைவில் குணமாகும்.

### பப்பாளி மரம் வளர்த்தல்

பப்பாளி மரத்தை எளிதில் வீட்டிலும், தோட்டத்திலும் வளர்க்கலாம். சிறிதளவு இடம்போதும். பசுமையான அகன்ற இலைகள் தோட்டத்திற்கு அழகையும் தரும்.

திருமதி.ஹெலன் ஞானப்பிரகாசம்



## பொதுக்கூட்ட அறிவித்தல்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட
2ஆம் வருட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்.
இடம்: மாணவர் பொது அறை
காலம்: இன்று (08-07-2003) முற்பகல் 11.00 மணி
அனைத்து மாணவர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

யாழ்.பல்கலைக்கழகம். 2ஆம் வருட மாணவர் பிரதிநிதி, கலைப்பீடம்.
(19952)(21-19-14-16)

## சேவைநலன் பாராட்டு



07-07-2003 முதலாகத்
தன்பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள
எமது ஆசிரியர்
**திரு.மாணிக்கம் கந்தசாமி மார்க்கண்டேயர்**
*அவர்களின்*
*சேவையினைப் பாராட்டி வாழ்த்தி*
*கௌரவிக்கின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.
(19948) (21-19-14-16)

## *பாராட்டி வாழ்த்துகின்றோம்*



சிவதருமவள்ளலும், சமூக சேவையாளரும், வேணி களஞ்சியம், வேணி ரான்ஸ்போட், கோகுல ரான்ஸ்போட் கொழும்பு உரிமையாளரும், யாழ்.சத்திரம் ஞானவைரவர், கந்தர்மடம் சித்தி விநாயகராலய அறங்காவற் சபைகளின் தலைவரும், யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம், புளியங்கூடல் முத்துவிநாயகர், வேலணை சிற்பனை முருகன் ஆலயச் சபைகளின் தனாதிகாரியும், தீவக அரிமாக்கழகம், செஞ்சிலுவைச் சங்கம், அகில இலங்கைத் திருமுறை மன்றம், வேலணை முடிப்பிள்ளையார் ஆலயச் சபை, பசுப் பாதுகாப்பு ஒன்றியம், தீவக மாவீரர் துயிலும் இல்லம் ஆகியவற்றின் உழைக்கும் உறுப்பினரும், புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவிற் திருப்பணிச் சபையின் உபதலைவருமான,

### உயர்திரு. குமாரசாமி கங்கைவேணியன்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் 30-06-2003 அன்று சமாதான நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ள இவர்பெற்ற இப்பதவி இவரின் சேவைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகுகவென அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இவரது அறப்பணிகள் மேலும் தொடர ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் நல்லாசிகளை வேண்டி உளமாரப் பிரார்த்தித்து ஆசிகூறிப் பாராட்டுகின்றோம்.

ஆஞ்சநேயர் ஆசியுடன் நீடு வாழ்க! வளம் பெறுக!

இணுவில்,
சுன்னாகம்.
(சி-28301)(21-14-16)

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
பிரதமகுரு, ஆதீனகர்த்தா
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம்
(21-14-16)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 13 - 07 - 1939



உதிர்வு 09 - 06 - 2003

### திருமதி குமாரதாசன் உருக்குமணி

(முன்னாள் விவாக, இறப்பு, பிறப்பு பதிவாளர்)

09-06-2003 திங்கட்கிழமை அன்று இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தாயார் **திருமதி குமாரதாசன் உருக்குமணி** அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (09.07.2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தேவி கோயிலடி,
ஏழாலை மத்தி.
(19954) (21-26-14-16)

*சகோதரர்களும்,*
*பிள்ளைகளும்.*

## முன்பள்ளி திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை8

பண்டத்தரிப்பு செபமாலை சன சமூக நிலையத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செபமாலை மாதா முன்பள்ளித் திறப்புவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் கு.விக்டரின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவின் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்வார்.

இப்பாடசாலைக் கட்டடத்தை அமைப்பதற்கு வேண்டிய காணியை அவ்வூரைச் சேர்ந்த திருமதி அருளம்மா அன்பளிப்பாக வழங்கியிருந்தார். (ம-15)

## திறந்த பல்கலை பதிவுகள்

அச்சுவேலி,ஜூலை8

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் அடிப்படைச் சமூக விஞ்ஞானம், கலைமாணி அடிப்படைச் சமூக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கான பிரிவுகள் எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

அடிப்படைச் சமூக விஞ்ஞானம், கலைமாணி அடிப்படைச் சமூக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் யாழ்பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## பரிசாரகர் பயிற்சி முடிவுற்றது

வடமராட்சி,ஜூலை8

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பரிசாரகர் பதவிக்கான மூன்றுமாதகாலப் பயிற்சியைப் பெற்ற சிற்றூழியர்கள், பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் பணிபுரிந்த 34 பேர் இப்பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (எ-173)

## உழவு இயந்திரம் தடம்புரண்டது

அரியாலை,ஜூலை8

பொருள்களை ஏற்றி வந்த உழவு இயந்திரம் ஒன்று தடம்புரண்டு மதகு ஒன்றில் வீழ்ந்து சேதத்துக்கு உள்ளானது.

நேற்றுமுன்தினம் சிறுப்பிட்டிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உழவு இயந்திரத்தைச் செலுத்தி வந்த நீர்வேலியைச் சேர்ந்த எம்.யுவேந்திரன் காயம் எதுவும் இன்றி தப்பிக்கொண்டார். உழவு இயந்திரம் சேதத்துக்கு உள்ளானது. (எ-17)

## மூக்குக்கண்ணாடி வழங்க நடவடிக்கை

வடமராட்சி,ஜூலை8

பார்வை குறைந்த மாணவர்களுக்கு தொண்டமனாறு சந்நிதியான ஆச்சிரமத்தில் அடுத்த மாதம் 4ஆம் திகதி நடைபெறும் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினத்தன்று இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

மூக்குக்கண்ணாடி அணியவேண்டிய, பார்வை குறைந்த மாணவர்கள தத்தமது பாடசாலை அதிபர்கள் மூலம் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-173)

## சிறப்புமலர் வெளியீட ஏற்பாடு

வலிகாமம் தெற்கு,ஜூலை8

வலிகாமம் பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சங்கத்தினால் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

மேற்படி சங்கத்தின் கிளைகளான சங்கானை, தெல்லிப்பழை, சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில் ஆகியன இணைந்து உருவாக்கும் இச்சிறப்பு மலர், வலிகாமம் பனை-தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி நிலைப்பாடு போன்ற சரித்திர வரலாற்று ஆவணமாக அமையும் என மேற்படி சங்கத்தின் தலைவர் க. மெய்யழகன் தெரிவித்தார்.

இம்மாத இறுதிவாரத்தில் சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறும் என்றும்-அன்றைய தினம் 2000ஆம் ஆண்டுக்கு பின்னர் சங்கத்தில் இருந்து வயது முதிர்ந்து ஓய்வுபெற்ற உறுப்பினர்கள், சங்கத்தினால் கௌரவிக்கப்படவுள்ளனர் என்றும் - அவர் தெரிவித்துள்ளார். (எ-152)

## கலைவாணி கல்வி நிறுவனம்

மானிப்பாய் வீதி, கோப்பாய்

★ **ENGLISH CLASSES**

**Classes for Grade 6 Students in English** Medium (ஆங்கிலமொழி மூலமான வகுப்புகள்)

பாடங்கள்
★ கணிதம்
★ சுற்றாடற்கல்வி
★ சுகாதாரமும் உடற்கல்வியும்


வகுப்புகள் நடைபெறும் நாள்கள்:
(C/28781) சனி, ஞாயிறு பிற்பகல் 3.30 - 6.30 (பு.நே.)
(21-26-14-16)

## துயர்பகிர்வு

கொழும்பில் காலமான எமது பாடசாலையின்
முன்னாள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்
**திருவாட்டி குணமணி கந்தப்பு**
அவர்களின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.
யா/பெரியபுலம் ம.வி.பாடசாலைச்சமூகம்.
(19961) (21-19-14-16)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 09 - 1946



உதிர்வு 19 - 06 - 2002

மாவிட்டபுரத்தைச் சார்ந்த இசை நாடகக் கலைஞர்
### அமரர் நடராசா தர்மலிங்கம்
திதி:நவமி

**சொந்தமதை விட்டகன்று ஓராண்டானாலும் சோகமதை விட்டு விட முடியுமா?**

இன்று (08-07-2003) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (19347) (21-19-14-16)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் லோகேந்திரன் துஷிகாந்தன்
(காந்தன்)

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட துஷிகாந்தன் நேற்றுமுன்தினம் (06-07-2003) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் லோகேந்திரன் - மகேஸ்வரியின் (ராணி) அன்பு மகனும் துஷ்யந்தனின் (குட்டி) அருமைத் தம்பியும் துஷீபன் (தீபன்), தினேஷ், லோபிகா, நிசாந்தன் (மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் ஆசை அண்ணாவும் கனகம்மாவின் அன்புப் பேரனும் ராஜேந்திரம் லீலாவின் அன்பு மருமகனும் றமா, கோபியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-07-2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு.
மீசாலை.
(19944) (21-19-14-16)

தகவல்:
இராசேந்திரம் றமா
(மைத்துனி)

### திருமதி ஆறுப்பிள்ளை செல்லமுத்து

கீரிமலை, நகுலேஸ்வரா வீதியை நிரந்தரவதிவிடமாகவும் வடலியடைப்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுப்பிள்ளை செல்லமுத்து அவர்கள் நேற்று (07.07.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் தங்கம்மா, மாமாங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி, தேவராசா (சங்கர் - சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), நாகேஸ்வரி, புவனேஸ்வரி, யோகராசா (குட்டி - லண்டன்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரன், மகேஸ்வரி, குணரத்தினம், பாலசசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திலாஜினி, கோமதர்சினி, கெங்காதர்சினி, வரப்பிரகாஷ், பிரதீபன், வசீகரன், பிரசன்னா, கஜ்சிகா, திலக்ஷன், யதுசன், (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வடலியடைப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக விளாவெளி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணி வீதி,*
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.*
(19951)

தகவல்:
ஆ.தேவராசா (சங்கர்)
(மகன்)

## "We are going" Party - 2003
**Faculty of Management Studies and Commerce**

எதிர்வரும் வியாழக்கிழமை (10.07.2003) நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வு தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளதால் இறுதி வருட முகாமைத்துவ, வணிக மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இடம் : $CH_7$
காலம்: 08.07.2003 மு.ப. 11.00.
* வரும் போது புகைப்படங்களுடன் வரவும்.

(19978) (28-12-17-31) ஒழுங்கமைப்புக் குழு.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா யோகராசா
தாயின் மடியில் 20.10.1952 — காலன் பிடியில் 10.07.2000

திதி : 08.07.2003

ஈர விழிகளுடன் இங்கிருந்து - உம்
உறவு தேடி
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தம்பாலை, அச்சுவேலி. (19988) (31-12-18) பிரிவால் வாடும் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அணியின் சகமாணவி
செல்வி ஆரணி தம்பிராஜா அவர்களின்
அன்புத் தந்தையார்
### கே. தம்பிராஜா அவர்கள்
இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து, தனது தந்தையை இழந்த எம் சகமாணவியினதும் அவரது குடும்பத்தினரினதும் துயரில் பங்கேற்கின்றோம்.

19ஆம் அணி மாணவர்கள்,
யாழ்.மருத்துவபீடம்.

(19974) (29-12-18-31)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் என்.ஏ.வைத்திலிங்கம்
புங்குடுதீவின் பெயரை இலங்கையில் மட்டுமல்லாமல் தான் சென்று தொழில் புரிந்த மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் முதலான நாடுகளிலும் பதித்த பெருமைக்குரியவரும் குடிசார் பொறியியலில் பெறக்கூடிய அதியுயர்ந்த பட்டங்களைப் பெற்றவரும் இலங்கை, புகையிரதத் திணைக்களத்தில் பிரதம பொறியியலாளராக நீண்டகாலம் பணிபுரிந்தவேளையில் 1957ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் நாடளாவிய பாரிய அழிவுகளை பொறியியல் உலகமே வியக்கத்தக்க வகையில் 90நாள்களில் மீண்டும் நாடு முழுவதும் புகையிரதங்களை ஓடவைத்த பெருமைக்குமுரியவரான

**என்.ஏ.வைத்திலிங்கம்**

அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியுறுகின்றோம். பெரியாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புங்குடுதீவு மக்கள் சார்பில
க.சிவராமலிங்கம்,
(இளைப்பாறிய பிரதி அதிபர், யா/இ.க.)
பேராசிரியர் கா.குகபாலன்
(யாழ்.பல்கலைக்கழகம்).

(19986) (28-12-18-31)

## தவறிவிட்டது
04.07.2003 அன்று கோண்டாவிலுக்கும் - மானிப்பாய்க்கும் இடையில் கணபதிப்பிள்ளை லோகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (811973068V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் களஞ்சியத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (19990) (29-12-18-31)

## தவறிவிட்டது
சுவினையில் இருந்து முருகண்டி சென்ற வானில் இருந்து கறுப்பு நிற பை (Bag) ஒன்று 6.7.2003 காலை 7.00-10.00 மணிக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S.நந்தகுமார், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, T.P.077-6064448, 070-213153 எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.
(19973) (29-12-17-31)

## பணியாளர் தேவை
புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியில் உள்ள இலட்சுமி பவன் உணவகத்துக்கு காலை (இடியப்பம்), மதிய உணவு சமைக்க, பரிமாற கைதேர்ந்த பணியாளர் தேவை.

09.07.2003 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
(சி-28810) (29-12-17-31)


**ராஜா** யாழ்ப்பாணம்
12ஆம் திகதி வரை
விக்ரம், ஜோதிகா, விவேக்
**தூள்**
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30
(31-12-17)

**நிறைஞ்சனாஸ்**
அர்ஜுன், மீனா, ஜோதிகா
நடித்த
**ரிதம்** (தினசரி)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
**THE LORD OF THE RINGS**
தினசரி இரவு 8.45 இற்கு
(C28685) (31-12-17)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று மட்டும் சீப்ராஜ் சேரன்
நாசர் நடித்த
**ஸ்ருடண்ட் No 1**
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேட காட்சி 7.00 (பு.நே.)
(C28823) (31-12-17)

**லிபேட்டி** அச்சுவேலி

புதிய வெளியீடு
பூமா, அப்பாஸ், தேவயானி, வையாபுரி, மணிவண்ணன் நடிப்பில்
**காதலுடன்** (தினசரி)
தினசரி காட்சி நேரம் 3.00, 7.00 (பு.நே.)
**THE LOST WORLD JURASSIC PARK** (தினசரி)
தினசரி காலை 11.00 மணிக்கு
(C28883) (31-12-17)


## பிறந்தநாள் வாழ்த்துக்கள்







### வினோஜன் அனோஜன்
நோர்வேயில் வசிக்கும் திரு. திருமதி வில்சன் தம்பதிகளின் செல்வப்புதல்வர்கள் வினோஜன், அனோஜன் ஆகிய இருவரும் தமது பிறந்தநாளை இன்று முல்லைத்தீவு அளம்பிலில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார்கள். வினோஜன், அனோஜன் ஆகிய இருவரையும் அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, பாட்டி அம்மம்மா லண்டன் பெரியப்பா, பெரியம்மா அன்புத் தங்கை நிவேதா, தம்பி றொனாட், லண்டன் அத்தை, மாமா, மச்சான், றொய்சன் மச்சான், மணல்காட்டில் வசிக்கும் அத்தைமார், மாமா, சித்தப்பாமார், அத்தான் டியூலன் கறின்சன், மச்சாள் டியூரினி மற்றும் அளம்பிலில் வசிக்கும் மாமாமார், மாமிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தி, அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் மணற்காடு புனித அந்தோனியாரின் அருள் ஆசிபெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(சி-28825) (31-12-18)

## துயர் பகிர்கின்றோம்
நல்லூர் கமநல சேவை நிலையத்தின் யாழ்.மாவட்ட விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையத்தின் உத்தியோகத்தராகிய
**திரு.கி.சற்குணராசா** அவர்களின் அன்புத் தந்தையார்
### கணபதிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை
அவர்கள் 04.07.2003 வெள்ளிக்கிழமை இயற்கை எய்தியதை இட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தி திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தரும் கமநல சேவை நிலைய ஊழியர்களும்
கமநல சேவை நிலையம், நல்லூர்,
உதவிப்பணிப்பாளரும் பணியாளர்களும்,
கமநல காப்புறுதிச்சபை, நல்லூர்.

(C28817) (29-12-17-31)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவமணி திருநாமச்சந்திரன்
கைதடி கிழக்கைச்சேர்ந்த திருமதி தவமணி திருநாமச்சந்திரன் நேற்று (07.07.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் திருநாமச்சந்திரனின் (பிரதேச சபை, சாவகச்சேரி) அன்பு மனைவியும் ஜெயதரன் (வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்), ஜெயக்குமார் (பிரதேச சபை, சாவகச்சேரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் அபிராமியின் அன்பு மாமியாரும் புவஷாந்தின் அன்புப் பேர்த்தியும் நவரத்தினம் காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சரஸ்வதி, பாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.07.2003) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி ஊற்றல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சந்திரவாசா"*
*கைதடி கிழக்கு, கைதடி.* (19972) (31-12-17)

தகவல்:
ந.திருநாமச்சந்திரன்
*(கணவர்)*

### Dr. சிதம்பரப்பிள்ளை நாகரட்ணம்
அராலியைச்சேர்ந்த Dr.சிதம்பரப்பிள்ளை நாகரட்ணம் அவர்கள் 06.07.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை - பார்வதியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் விஜயதேவியின் அன்புக் கணவரும், சிவகணேசன் (UK), சிவாஜினி (UK), சிவலோஜினி (ஜேர்மனி), சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், குகந்தினி, கருணாகரன், குகராஜா ஆகியோரின் மாமனாரும் வர்ஷன், லோகன், கஜனி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.10 மணியளவில் புநாவடை மயானத்துக்குத் தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (19972) (31-12-17)

தகவல்:
சிவகாந்தன் *(மகன்)*

### திருமதி லலிதா சிறிகிருஸ்ணராசா
**(கற்கண்டு ரீச்சர் ஆங்கில ஆசிரியை B.A. Dip. in Edu.)**
**மந்துவில் றோ.க.த.க. பாடசாலை**

மீசாலையைப் பிறப்பிடமாகவும் எச்சாட்டி வைரவர் கோயிலடி, சுதுமலைதெற்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சி. லலிதா (கற்கண்டு ரீச்சர்) நேற்று (07.07.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் செ.வேலுப்பிள்ளையின் மூத்த புதல்வியும் மானிப்பாயைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும் சிறிகிருஷ்ணராசாவின் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர்) அன்பு மனைவியும் லஷ்மி (சுமி)யின் பாசமிகு தாயாரும் நடனரூபனின் அன்பு மாமியும் அபிஷாவின் பேர்த்தியும் கேமலதா (விஞ்ஞான ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ரஞ்சிதா (தாதிய உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை கோப்பாய்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் இருந்து காலை 10.30 (பு.நே.) மணியளவில் நல்லடக்கத்திற்காக காக்கைதீவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி :
*எச்சாட்டி வைரவர் கோயிலடி*
*சுதுமலை தெற்கு மானிப்பாய்.*
நிரந்தர முகவரி :
*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

தகவல்:
ந.லஷ்மி *(சுமி-மகள்)*
நடனரூபன் *(மருமகன்).*

(19980) (31-12-17)

### இராமுப்பிள்ளை சத்தியமூர்த்தி (மூர்த்தி)
**(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை சத்தியமூர்த்தி நேற்று (07.07.2003) திங்கட்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை (மலேயன் பென்சனியர்) - அன்னலட்சுமி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசபை (மலேயன் பென்சனியர்) - நாகம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும், காலஞ்சென்றவர்களான புனிதவதி நவரத்தினம், புஷ்பவதி அருளம்பலம் மற்றும் போகலிங்கம் (மலேசியா), குணபாலசிங்கம் (கொழும்பு), திருமதி சத்தியபாலதேவி சிவதாஸ் (லண்டன்) ஆகியோரது அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

*92, பலாலி வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (19996) (30-12-17-31)

தகவல்:
ந.ஜெயத்திலகன் (மருமகன்),
க.இந்திரலிங்கம் (மைத்துனர்).

'கொலைகாரர்கள்! கொள்ளைக்காரர்கள்!!'

# அமைச்சரவை அங்கத்தவர்கள் பற்றி ஜனாதிபதி திடுக்கிடும் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை8

கொலைகாரர்களும் பகல் கொள்ளைகளில் ஈடுபடுகின்றவர்களுமே இன்றைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றார்கள் என்று திடுக்கிடும் குற்றச்சாட்டு ஒன்றை சுமத்தியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுமுன்தினம் சிலாபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

1977ஆம் ஆண்டுக்குப் பின்னரே நாடாளுமன்றத்துக்கு இவ்வாறானவர்களின் வருகை அதிகரித்தது. அதற்கு முன்னர் - 1977 ஆம் ஆண்டுக்கு முன் - இலங்கை அரசியலில் கொள்ளைக்காரர்கள் இருக்கவில்லை; தற்போதுபோல் துஷ்டர்கள் இருக்கவில்லை. லஞ்சம் வாங்குபவர்கள் அரசியலை வியாபாரமாக்கி நாடாளுமன்றத்தை அடைபவர்கள், தமக்கு வாக்களித்த மக்களின் தோள்கள் மீது ஏறிநின்றுகொண்டு ஊழல் செய்கின்றவர்கள், கொலை செய்கின்றவர்கள் ஆகியோர் அப்போது இருக்கவில்லை. அன்று மிகவும் சிறந்த முறையில் அரசியலில் ஈடுபட்டவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தார்கள் - இவ்வாறு ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஒ-3)

## மு.கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் மூலமாக இன்னும் ஓரிரு தினங்களில் அனுப்பிவைக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

அரசு - புலிகள் பேச்சில் முஸ்லிம் காங்கிரஸ் பங்கு பற்றுவதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


## துரித சாரதிப் பயிற்சி

குழுக்களாக உங்கள் பகுதிகளிலேயே ஒழுங்கான துரித வாகன சாரதிப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் (லைசன்ஸ்) விரைவில் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

★ கனன் தொலைத்தொடர்பகம்
535, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

★ தயூரி வீடியோ,
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

அடுத்த குழுவுக்கான பயிற்சி ஜூலை 15 இல் ஆரம்பமாகும். (19641)(30-17-18)

An opportunity to become an Engineer

City & Guilds Lond. U.k. Dec. 2003

**Telecommunication Systems**

Certificate Level

O/L தகுதியுடன் Computer Technology Mobile Radio - Cellular phone-PSTN-Radio-TV-optical Fibre-Digital Network and Data Cmmunication 6 மாத காலத்தில் செய்முறைப்பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும்.

பரீட்சைகள் British Council லினால் நடத்தப்படும்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற தராதரம்.

பல மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க

**14.07.2003 பி.ப03.30 இற்கு ஆரம்பம்** C/28773

**VICKNAA Tution Centre**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.077 7571834

கொழும்பில்: APSS International T.P:362547


## பாராட்டி வாழ்த்துகிறோம்



சிவதருமவள்ளலும், சமூக சேவையாளரும், வேணி களஞ்சியம், வேணி ரான்ஸ்போட், கோகுல ரான்ஸ்போட் கொழும்பு உரிமையாளரும், யாழ். சத்திரம் ஞானவைரவர், கந்தர்மடம் சித்தி விநாயகராலய அறங்காவற் சபைகளின் தலைவரும், யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம், புளியங்கூடல் முத்து விநாயகர், வேலணை சிற்பனை முருகன் ஆலயச் சபைகளின் தனாதிகாரியும், தீவக அரிமாக் கழகம், செஞ்சிலுவைச்சங்கம், அகில இலங்கைத் திருமுறை மன்றம், வேலணை முடிப்பிள்ளையார் ஆலயச் சபை, பசுப் பாதுகாப்பு ஒன்றியம், தீவக மாவீரர் துயிலும் இல்லம் ஆகியவற்றின் உழைக்கும் உறுப்பினரும், புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவிற் திருப்பணிச் சபையின் உப தலைவருமான

### உயர்திரு. குமாரசாமி கங்கைவேணியன்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம்செய்துள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன முன்னிலையில் 30.06.2003 அன்று சமாதான நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ள இவர் பெற்ற இப்பதவி இவரின் சேவைக்கு மேலும வலுச்சேர்ப்பதாகுகவென அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அம்பாள் ஸ்ரோர்ஸ், வேலணை, சுருவில் வீதி, புளியங்கூடல். (சி-28778) (30-18-17)

உரிமையாளர்:- SMS பல்பொருள் வாணிபம், SMS தொலைத் தொடர்புநிலையம் (கண்ணன் கடை),

## வலிகாமம் கோட்ட கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கு!

வலிகாமம் கோட்டத்துக்குட்பட்ட உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, கோப்பாய் ஆகிய உதவி அதிபர் பிரிவுகளில் வாழும் கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கான சந்திப்பு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமம் கோட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர்.

## காவலாளிகளுக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஈ.பி.ஆர்.எல்.எவ. வரதர் அணியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் த.சுபத்திரனின் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வேம்படி மகளிர் கல்லூரியின் காவலாளிகள் இருவரும் யாழ் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ்விருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.(ஒ-5)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு விஜயஞ்செய்த கண்காணிப்புக் குழுத்தலைவர் டெலிவ்ஷென் நேற்றுமுன்தினம் சம்பூரில் புலிகளுடனும், நேற்று கடற்படைத்தளத்தில் கடற்படையினருடனும் பேச்சு நடத்தினார்.

குரங்குபாஞ்சான் பகுதியில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் குறித்தும் கடற்படை உறுப்பினர் ஒருவரை புலிகள் விடுதலை செய்வது குறித்தும் ஆராயப்பட்டது. எனினும், மேற்படி விடயங்களில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

இந்தச் சந்திப்புக்களில் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்டத்தலைவரும் கலந்துகொண்டார்.

கண்காணிப்புக் குழுத்தலைவர் மீண்டும் படைத்தரப்பையும் புலிகளையும் நாளை திருமலையில் சூனியப் பிரதேசத்தில் இந்தவிடயங்கள் தொடர்பாக சந்தித்து உரையாடவுள்ளார்.


எமது புதிய வீடியோ CD வெளியீடு

கோவில்பட்டி வீரலட்சுமி
விசில்
ஜெயம்
பிரதிகள் உடன் பெறலாம்.
வீடியோ விமல் (19987) (30-18-17)

குகன் ஆவரங்கால்
அடிப்படையில் இருந்து பேச்சு ஆங்கிலம்
புதிய பிரிவுஆரம்பம்
09.07.2003 புதன்
10.30 (பழையநேரம்)
ஆசிரியர்:-
திரு.நிஷாந்தன்
உடன் அனுமதிகளைப் பெறவும். (9984) (30-18-17)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சிம்ரன் நடித்த
★ கோவில்பட்டி வீரலட்சுமி
★ விசில் (சி-28822)
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்
A/L DAY CLASS
BIOLOGY
ஆரம்பம்: 10.07.2003 Thurs. 9.30a.m.
By: நாகநாதன்
அசேதன இரசாயன வினாவிடை
ஆரம்பம்:Thurs.8.30a.m
By: அன்பழகன்


# தனயனைக் கொன்ற தந்தை கைது!

தனயனைக் கொன்றுவிட்டு தலைமறைவாகிய தந்தையை சாவகச்சேரிப் பொலீஸார் மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்து நேற்றுமுன்தினம் - கொலை நடந்து 6 மணி நேரத்தில் - கைதுசெய்து நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மீசாலை கேணியடி வயற்கரைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் இந்த நபர் மகன் ஒருவரைக் கத்தியால் குத்தி கொன்றதுடன், மற்றொரு மகனை காயப்படுத்தியமை தெரிந்ததே. (ஒ-117)

## வங்கிக் கணக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயரத்தினம் முறைப்பாடு ஒன்றை எமக்குச் சமர்ப்பித்திருந்தார்.

திருநெல்வேலிச் சந்தை, கைதடி முதியோர் இல்லம், சாவகச்சேரி சந்தை, கொக்குவில் சந்தை உட்பட 14 கட்டடப்பணிகளுக்கு மொத்தம் 4 கோடியே 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும் -

அதில் 4 கோடி ரூபா அளவில் மோசடி நடந்துள்ளதாக அறியவந்துள்ளதாகவும் - அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக யாழ்.செயலக பிரதம எழுதுவினைஞரை விசாரித்து வாக்குமூலம் பதிந்துள்ளோம். அவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இக்கட்டடப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை கையாண்ட மக்கள் வங்கியின் பிரதான வீதிக்கிளையின் கணக்கின் 58 காசோலைகள் தொடர்பான விவரங்களைப் பெறவேண்டியுள்ளது. அவற்றைப்பெறுவதற்கு உத்தரவிடுமாறு கோருகின்றோம் - என்று மனுவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிவான் குறிப்பிட்ட விவரங்களை வழங்குமாறு வங்கி முகாமையாளருக்கு உத்தரவிட்டார்.

"இந்த மனு சிங்கள மொழியில் தாக்கல் செய்யப்பட்டது தவறு. அரச அமைப்பின் பரிந்துரைக்கு அமைய தமிழ் மொழியில் சகல வழக்கு விசாரணைகளும் இடம்பெறுகின்றன. எதிர்காலத்தில் தமிழிலேயே மனுத்தாக்கல் செய்யவேண்டும்" என்றும் நீதிவான் மனுதாரருக்கு அறிவுறுத்தினார். (ஒ-3)

# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா பரமானந்தம் (பத்தர்)

(பிரபல விஸ்வஞ்ஞ விற்பன்னர்)

யாழ்.வண்ணை நாச்சிமார் கோயிலடி விஸ்வப்பிரம்ம திலகர் துரையப்பா பரமானந்தம் கடந்த 04.07.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் துரையப்பா, தங்கம்மா தம்பதிகளின் புத்திரனும் வேதவள்ளியின் அன்புக் கணவரும் நவநீதகிருஸ்ணன் (சுவிஸ்), இராதாகிருஸ்ணன் (புதுக்குடியிருப்பு), பாலமுரளிகிருஸ்ணன் (சுவிஸ்), கோகிலகிருஸ்ணன், சந்தானகிருஸ்ணன் (லண்டன்), சிவராமகிருஸ்ணன் (ரமணன்-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரஞ்சிதமலர் (சுவிஸ்), சுபத்திரா (ஆசிரியை, முல்லை கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), தாரணி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், விணோஜிதன், கஜன், வேணுஜா, ஆதித்தன், தரணீதரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் அமரர் இராசதுரை, அமரர் திருநாவுக்கரசு, சண்முகராசா (கொழும்பு), கோபாலகிருஸ்ணன் (கணற்கேணி), உருத்திரமணிதேவி, அமரர் தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் புவனேஸ்வரி, சிவபாக்கியம் (ஹொலண்ட்), இன்பஜோதி (கொழும்பு), விவேகவதி (கணற்கேணி), திருச்செல்வம், அமரர்களான பரமேஸ்வரன், பரமேஸ்வரி,சின்னத்தம்பி மற்றும் பசுபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (9.7.2003) புதன்கிழமை காலை 9.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18/5,கேசாவில் பிள்ளையார் வீதி,*
*வண்.பண்ணை,வடமேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (19985)(30-17-18-29)

தகவல்: குடும்பத்தினர்.

## கணபதிப்பிள்ளை தம்பிராசா

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தம்பிராசா அவர்கள் 04.07.2003 வெள்ளிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் (ஆசிரியை) அன்புக் கணவரும் செல்லம்மாவின் அன்புச் சகோதரரும் புனிதவேல் (**Union assurance Ltd, Puttalam**), பவானி (**Holand**), ஆரணி (யாழ். மருத்துவபீடம் இறுதியாண்டு) ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிராணி, சற்குணசெல்வம் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஸ்ணு, அபிராம், அர்ஜுன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2003) செவ்வாய்க்கிழமை காலை 11மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***G.P.S. Road***
*கல்வியங்காடு.* (19982) (30-18-12)

தகவல்: பிள்ளைகள்: த.புனிதவேல், த.ஆரணி.

## கந்தர் லிங்கமூர்த்தி

(ஓய்வு பெற்ற சாரதி வ.இ.போ.ச.)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் லிங்கமூர்த்தி நேற்று (7.7.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் லிங்கேஸ்வரி, தனேஸ்வரி, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்லையா, நடராஜா, பரமசாமி, இராசம்மா, பரிமளம்மா, பூரணம்மா, சௌந்தரம்மா, அழகம்மா, ஞானம்மா, ஆகியோரின் சகோதரரும் குலேந்திரன்(வீடியோ விமல்), ராஜேந்திரன்(கனடா), சுசீலாதேவி, தனகாம்பிகை(கனடா), ரேவதி ஆகியோரின் மைத்துனரும் திருமதி சரவணமுத்து, அன்னலெட்சுமியின் மருமகனும் சிவஞானசுந்தரம்(கொழும்பு), உஷாதேவி, நித்தியானந்தன் (கனடா), சண்முகநாதன், விமலேஸ்வரி(கனடா) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (9.7.2003) புதன்கிழமை மு.ப.10.00மணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*C.T.B. டிப்போஅடி,*
*கலைவாணி வீதி,*
*கோண்டாவில்.* (19993) (30-17-18-12-28)

தகவல்: வி.மயூரன்.(மகன்) (C.T.B.பொறியியல் பகுதி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.